Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 36    இதழ் - 7    ஜூலை - 2023

தனிப்பிரதி ரூ.10/-



## ஊழியர்களுக்கான சிறப்பு மருத்துவ முகாம் 8.7.2023 சனி அன்று சென்னையில் நடைபெற்றது.

**Mini Master Health Checkup செய்யப்பட்டு மருந்துகளும், மருத்துவ ஆலோசனைகளும் இலவசமாக வழங்கப்பட்டது.**






## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| 1. ஆசிரியர் உரை | 3 |
| 2. நாம் யாரை ஆராதிக்க... | 11 |
| 3. பெண்கள் பகுதி | 14 |
| 4. வாலிபர் பகுதி | 17 |
| 5. சிறுவர் பகுதி | 22 |
| 6. பொய்யான கிறிஸ்துவின்... | 23 |
| 7. வல்லமை தேவனுடையது | 28 |
| 8. இரண்டு மாறுபட்ட... | 31 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**
**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 36 July - 2023 Issue - 7**

ஆசிரியர் உரை

## கர்த்தரின் வாக்கைக் கேளாமல்...

**பூ**மிக்கோள் முழுவதிலும் பரவி வாழும் ஒட்டுமொத்த மானிட இனத்தில், சர்வவல்ல தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்ற சிறப்பு நிலைக்கு உரிமையாளர்களாகத் திகழ்ந்தவர்கள் இஸ்ரவேல் ஜனங்கள். இப்படித் தன்னால் பிரத்யேகமாக நேசிக்கப்பட்டு, வழிநடத்தப்பட்டு, பாதுகாக்கப்பட்ட இஸ்ரவேலர்களுக்குத் தேவன் வழங்கிய அறிவுரைகளில் ஒன்று **இஸ்ரவேலே கேள்** என்பது. கேட்பதின் அவசியம் தேவனுக்குத் தெரியாத ஒன்றல்ல. எப்படியெனில், தன் வார்த்தைகளைக் கேளாமல் போனதால் ஆதிப் பெற்றோர் தேடிக்கொண்ட சாபம் மற்றும் தன் வார்த்தைகளுக்கு செவிகொடுத்துக் கீழ்ப்படிந்த தேவ மனிதர்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்கள் அவர் அறிந்த ஒன்றுதான். ஆகவேதான், எகிப்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் தலைமுறை இஸ்ரவேலருக்கு இதுமிகவும் அவசியம் என்று கண்டார். காரணம், முதல் தலைமுறையினர் கர்த்தரின் வார்த்தைகளைக் கேளாமல், தேவகோபத்திற்கு ஆளாகி வனாந்திரத்தில் மாண்டுபோனார்கள். கானானுக்குள் கால்பதிக்கக் காத்துக்கொண்டிருக்கும் இரண்டாம் தலைமுறையினரே நீங்களாகிலும் கவனமாக இருந்து காரியத்தை நடத்துங்கள் என்று கூறுகிறார்.

தேவன் இந்த அறிவுரையை வழங்கினபோது மோசே தாசனுக்கு வயது 120. தான் மரணிப்பதற்கு முன்பாக இஸ்ரவேல் ஜனங்களைக் கூட்டிச் சேர்த்து ஒரு மூன்று பிரசங்கங்கள் செய்கிறார். இந்த மூன்றும் சேர்ந்தது தான் 34 அதிகாரங்களைக் கொண்ட உபாகமம் நூல். மூன்று பிரசங்கங்களும் ஒவ்வொரு செய்தியை மையப்படுத்தியது. முதல் பிரசங்கம் (உபா. 1-4) தேவன் இஸ்ரவேலர்களாகிய **உங்களுக்கு என்ன செய்தார்** என்பது. இரண்டாவது பிரசங்கம், இஸ்ரவேலர்

களாகிய **உங்களிடம் தேவன் என்ன எதிர்பார்க்கிறார்** என்பது (உபா. 5:26). மூன்றாவது பிரசங்கம், **தேவன் உங்களுக்கு என்ன செய்வார்** என்பது (27-30). இம்மூன்றில் இரண்டாவதில் இடம்பெறுவதுதான் இஸ்ரவேலேகேள் என்பது. கேட்பதை தேவன் கண்டிப்பாக எதிர்பார்க்கிறார்.

உண்மை இப்படியாக இருந்தாலும், பல நேரங்களில் கேட்கிற காரியத்தில் ஆதிமுதல் மனிதன் பலவீனமானவனாகவே உள்ளான். தேவ மனிதர்களும் சில வேளைகளில் இக்காரியத்தில் விதிவிலக்காக இல்லையென்பது வருத்தமான ஒன்று. யானைக்கும் அடி சறுக்கும் என்பது போல் காரியங்கள் நடந்து வருகிறது. அப்படிப்பட்ட ஒரு சம்பவத்தை நாம் யோசுவா நூலில் பார்க்க முடியும்.

இப்பொழுது நாம் நமது வாழக்கத்தின்படி அச்சம்பவத்துக்கான பின்னணியைப் பார்த்து விடுவோம்.

யோசுவா ஒரு மாபெரும் தலைவன். தலைமைப் பண்பில் பெரிதாக ஏற்ற இறக்கங்கள் இல்லாமல் சீரான தன்மை கொண்டவன். நான் பெரிதும் விரும்பும் பழைய ஏற்பாட்டு பக்தர்களில் யோசுவாவுக்கு தனி இடம் உண்டு. இந்நூல் ஆகமங்களையும், எஞ்சிய சரித்திர நூல்களையும் இணைக்கும் ஒரு பாலமாக அமைந்துள்ளது. கானானில் இருந்த ஏறக்குறைய 30 எதிரிப் படைகளை 3 பெரும் தாக்குதல்கள் மூலம் முறியடித்து வெற்றிவாகை சூடிய பெருமை இந்த யோசுவாவையே சாரும். இவ்வெற்றிகள் ஓர் அர்த்தமுள்ள செய்தியை இவர்களுக்கு சொல்லியது. **வெற்றி ராணுவ பலத்தால் வராமல், கர்த்தரில் விசுவாசம் வைத்து, அவர்தம் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவதால் தான் வருகிறது** என்பதே இச்செய்தி.

மோசேயின் மரணத்திற்குப் பிறகு பொறுப்பை ஏற்றுக்கொண்ட யோசுவாவுக்கு தேவனால் சொல்லப்பட்டவைகளில் ஒன்று, இந்த நியாயப்பிரமாணப் புத்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; **இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி**, இரவும் பகலும் அதை தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன்வழியை வாய்க்கப் பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்ளுவாய் (யோசுவா 1:8) என்பது. ஆனால், புத்திமானாய் நடந்து கொள்ளும் படியான ஆலோசனை கொடுக்கப்பட்டிருந்தும் யோசுவாவும், இஸ்ரவேலரும் தடுமாறித் தவறிழைத்தனர். தெரிந்தும், துணிந்தும் இத்தவறு நடக்கவில்லை. எப்படியிருந்தாலும் தவறு தவறுதானே! வெள்ளைச் சட்டையில் கருப்புப் புள்ளி பட்டது போல் ஆகிவிட்டதே! பாவம் யோசுவா! மோசேயின் இடத்திற்குத் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவன் என்ற உயர்ந்த இடத்திலிருந்து கர்த்தரின் வாக்கைக் கேளாதவன் என்ற களங்கத்திற்கு ஆளாகிவிட்டான். கண்டிப்பாகப் பாவம்தான்!

அப்படியா? அது எப்போ என்று யோசிக்கிறீர்களா? இன்னும் கூட

அப்படி இருக்காது என்றுதானே எண்ணுகிறீர்கள். நான் சொல்லவில்லை, கர்த்தரின் வார்த்தை அவன் கர்த்தரின் வாக்கைக் கேட்கவில்லை என்று சொல்லுகிறது. இப்பொழுது நம்பித்தானே ஆக வேண்டும்.

வீரம், விவேகம் கொண்ட யோசுவாவின் தலைமையின் கீழ் பெரும் பட்டணமாகிய எரிகோவில் சுலபமாக வெற்றி. அடுத்து சிறிய பட்டணமாகிய ஆயியில் படுதோல்வி. இத்தோல்வி ஆகானின் துரோகத்தால் வந்த ஒன்று. துரோகம் துடைத்தெறியப்பட்டபோது மீண்டும் வெற்றி (யோசுவா. 7 -ம்அதி). தேவன் யோசுவாவோடும், இஸ்ரவேலரோடும் கூட இருப்பதும். அப்படி இருப்பதால் வெற்றிகளைக் குவிப்பதும் கானானின் பூர்வக்குடிகளின் வயிற்றில் புளியைக் கரைத்தது. எதிர்கொள்ள வழிதெரியாமல் எதிரிகள் கூட்டணி போட்டனர் (9:1,2). இந்தக் கூட்டணியில் சேர்ந்தாலும் துவம்சம் செய்யப்படுவது நிச்சயம் என்பதை உணர்ந்து, **தப்பிக்கும் வழிதேடிய கிபியோனின் குடிகள் ஒருதந்திரமான யோசனை பண்ணி, தங்களை ஸ்தானாபதிகள் போல காண்பித்து பழைய இரட்டுப் பைகளையும், பீறலும் பொத்தலுமான பழைய திராட்ச ரசத் துருத்திகளையும், தங்கள் கழுதைகள் மேல் வைத்து, பழுதுபார்க்கப் பட்ட பழைய பாதரட்சைகளை தங்கள் கால்களில் போட்டு, பழைய வஸ்திரங்களை உடுத்திக் கொண்டார்கள். வழிக்கு அவர்கள் கொண்டுபோன அப்பமெல்லாம் உலர்ந்ததும், பூசணம் பூத்ததுமாயிருந்தது. அவர்கள் கில்காலில் இருக்கிற பாளையத்துக்கு யோசுவாவினிடத்தில் போய், அவனையும் இஸ்ரவேல் மனிதரையும் நோக்கி: நாங்கள் தூரதேசத்திலிருந்து வந்தவர்கள். எங்களோடே உடன்படிக்கை பண்ணுங்கள் என்றார்கள்'' (யோசுவா 9:4-6).**

இப்படிப்பட்ட நேரங்களில் இஸ்ரவேலர்கள் என்ன செய்யவேண்டும் என்று தெளிவான தேவக்கட்டளை இருந்தது. **நீ போய்ச் சேருகிற தேசத்தின் குடிகளோடு உடன்படிக்கை பண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிரு** (யாத். 34:12) என்றும், நீ சுதந்தரிக்கபோகிற தேசத்தில்.... உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உன்னிடத்தில் ஒப்புக்கொடுக்கும்போது, அவர்களை முறியடித்து, அவர்களை சங்காரம் பண்ணக்கடவாய்; அவர்களோடே **உடன்படிக்கை பண்ணவும் அவர்களுக்கு இரங்கவும் வேண்டாம்** (உபா. 7:1,2) என்று சொல்லப்பட்டிருந்தது. ஆனால், **தோற்றமும், பேச்சும், அதற்கான ஆதாரங்களும்** நம்பும்படியாக இருந்தபடியால் முழுமையாக யோசுவாவும், இஸ்ரவேலரும் ஏமாற்றப்பட்டார்கள். பொய்யை உண்மை என்று நம்பி கர்த்தருடைய வாக்கைக் கேளாமல்... உடன்படிக்கை பண்ணி... யோசுவாவும் சபையின் பிரபுக்களும் **ஆணையிட்டு கொடுத்தார்கள்** (யோசுவா 9:14,15) மூன்று நாளைக்குப் பிறகு தாங்கள் வஞ்சிக்கப்பட்டதை அறிந்தபோது, தாங்கள் இட்ட **ஆணையினிமித்தம்** அவர்களை ஒன்றும் செய்ய வழி தெரியாமல்,

தங்களுக்கு வேலைக்காரர்களாக வைத்துக் கொண்டார்கள் (யோசுவா 9:23).

கர்த்தருடைய வாக்கைக் கேட்பதில் கொஞ்சம் பிசகினபோது யோசுவா போன்ற தேவமனிதர்களே கூட வஞ்சிக்கப்பட்டதைக் காண்கிறோம். அப்படியானால், கர்த்தருடைய வார்த்தைகள் சம்பந்தமாக நாம் எவ்வளவு கவனமாகவும், எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டுமென்று பாருங்கள், பயமாக இருக்கிறது.

சரி, இதன் மூலம் நமக்குக் கிடைக்கும் படங்கள் என்ன வென்று பார்ப்போம்.

## I. கிபியோனின் குடிகள் தோற்றத்தில் ஏமாற்றினார்கள்

கர்த்தரின் வாக்கைக் கேளாமல், வஞ்சிக்கப்பட்ட யோசுவா மற்றும் இஸ்ரவேலின் பிரபுக்கள் மூலம் நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், தோற்றத்தைம் பார்த்து ஏமாறக் கூடாது என்பது.

வஞ்சித்தல் என்பதின் பொருள், உண்மையில்லாத ஒன்றை எப்பாடுபட்டாவது உண்மையென நம்ப வைப்பது. இக்கலையில் முதலிடம் எப்போதும் சாத்தானுக்கு தான் (ஆதி. 3:13) ஏதேன் தோட்டத்திலேயே இத்தீமைக்குத் தூபம் போட்டு விட்டான் இத்தீமையில் ஒருவன் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதற்கு பொய்யும், நடிப்பும் மூட்டை மூட்டையாகத் தேவை. சாத்தானின் வாரிசுகள் இதில் எப்போதும் கைதேர்ந்தவர்களாகவே இருப்பர். குறுக்கு வழியில் தாங்கள் விரும்புவதை அடைய நினைக்கும் மக்கள் சுலபமாக இத்தீமையால் தீண்டப்பட்டு விடுவார்கள்.

கிபியோனின் குடிகள் தங்கள் தோற்றத்தை வைத்தே யோசுவாவையும், அவனோடிருந்த பிரபுக்களையும் ஏமாற்றினார்கள். தங்களை சராசரியான குடிகள் போல் காட்டாமல் வேறொரு நாட்டின் தூதுவர்கள் போல முதலில் காட்டினார்கள். தங்களின் நெடுந்தூரப் பயணத்திற்கு ஏமாற்றுக்கும் ஆதாரமாக பழைய இரட்டுப் பைகள், பொத்தலான துருத்திகள், பழுது பார்க்கப்பட்ட பாதரட்சைகள் கந்தலான ஆடைகள், கெட்டுப்போன ஆகாரம் என்று ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்குகிறார்கள். கர்த்தரை நம்பி உள்ளத்திலே கபடில்லா மல் காரியமாற்றிக் கொண்டிருந்த யோசுவாவுக்கு இவர்களின் பித்தலாட்டங்கள் புரியவில்லை. பொதுவாகவே, எதிரிகளை அடையாளம் காண முடியும். ஆனால், துரோகத்திடம் தோல்வியே மிஞ்சும். தேவனுக்குப் பயந்து வாழ்பவர்கள் வஞ்சகர்களிடம், துரோகிகளிடம் சுலபமாக வீழ்ந்து விடுவது வேதனையான ஒன்று.

அருமையானவர்களே! நம்முடைய நாட்களிலும் நிலைமை இப்படித்தானே உள்ளது! புறத் தோற்றத்திற்கு கிறிஸ்தவம் தேவைக்கும் அதிகமான முக்கியத்துவம் கொடுத்து பக்தி வாழ்வில் ஏமாந்து கொண்டுள்ளது! சுலபமாக வஞ்சிக்கப்படுகிறார்கள். அங்கிகளுக்கும், ஜிப்பாக்களுக்கும், கோட்டு சூட்டுகளுக்கும் தேவ

பார்வையில் ஏதோ தனிப்பட்ட சிறப்பு இருக்கிறது என்று எண்ணி கிறித்தவம் கீழ்நிலைக்கு சென்று கொண்டிருப்பது உங்களுக்கெல்லாம் தெரிகிறதா, இல்லையா? அதிலும் குறிப்பாக, நவீன கால ஊழியக்காரர்கள், தங்களை வரம் பெற்றவர்கள் என்று தம்பட்டம் அடித்து ஆன்மீக மோசடியில் இறங்கியிருப்பதை கவனிக்கிறீர்களா? மக்கள் மத்தியில் தாங்கள் அழகாகவும், எடுப்பாகவும் தெரிய வேண்டுமென்று அலங்காரத்துக்கு அதீத முக்கியத்துவம் தருகின்றனர். தங்கள் புகைப்படங்களை விதவித மாடல்களில் போஸ்டர்களிலும், அட்டைப் படங்களிலும் போட்டு விளம்பரப்படுத்துகிறார்கள். நடிகர், நடிகைகள் தள்ளி நிற்க வேண்டும் போல் தெரிகிறது. பக்தியற்றவர்கள் இதிலே மயங்கினால் அது வேறு. ஆனால், நல்லவர்களும், தேவ பயமுள்ளவர்களும் கூட இந்த வேடத்தில் கவரப்பட்டு விலை போய் விடுவதை என்ன சொல்வது ? இப்படிப்பட்டவர்களின் கபட நாடகத்தை இயேசு ஆண்டவர் 2000 ஆண்டுகளுக்கு முன்பே சாடியுள்ளாரே! தங்கள் கிரியைகளையெல்லாம் மனுஷர் காணவேண்டுமென்று செய்கிறார்கள்; **தங்கள் காப்பு நாடாக்களை அகலமாக்கி, தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களைப் பெரிதாக்கி விருந்துகளில் முதன்மையான இடங்களையும், ஜெப ஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும், சந்தை வெளிகளில் வந்தனங்களையும் மனுஷரால் ரபீ,ரபீ என்று அழைக்கப் படுவதையும் விரும்புகிறார்கள்** (மத். 23:5-7) என்று.

கிபியோனியரின் வேடம் எப்படி யோசுவா போன்ற பக்திமான்களை ஏமாற்றப் பயன்பட்டதோ அதுபோல இந்த அற்ப ஜந்துக்களின் வேடம் கர்த்தருக்குப் பயப்படும் நல்ல உள்ளங்களைக் கொள்ளை கொண்டு போக பயன்படுகிறது. இந்த அவல நிலை எதிர்காலத்தில் பிசாசின் மனிதர்களிடம் வெளிப்படும் என்று முன்னறிந்து இயேசு ஆண்டவர், **தோற்றத்தின் படி தீர்ப்பு செய்யாமல் நீதியின்படி தீர்ப்பு செய்யுங்கள் என்றார்** (யோவான் 7:24)

நாம் எப்படித் தீர்ப்பு செய்து கொண்டுள்ளோம்? தோற்றத்தின் படியா? நீதியின்படியா? நம் பக்தி வாழ்வைச் சுற்றிலும் கிபியோனின் குடிகளாகிய, குருமார்கள், ஊழியக்காரர்கள், பாஸ்டர்கள், வரம் பெற்றவர்கள் என்று தங்களுக்கு தாங்களே பட்டங்கள் சூட்டிக் கொண்டு அலைபவர்கள் பட்சிக்கிற ஓநாய்களாக ஆட்டுத்தோலை போர்த்திக் கொண்டு திரிகிறார்கள் (மத். 7:15). எச்சரிக்கையாயிருப்பது அவசியம். கர்த்தரின் வார்த்தைகளுக்கே எப்பொழுது செவி கொடுக்க வேண்டும்.

## II. கிபியோனின் குடிகள் பேச்சில் ஏமாற்றினார்கள்

கர்த்தரின் வாக்கைக் கேளாமல் வஞ்சிக்கப்பட்ட யோசுவா மற்றும் இஸ்ரவேலின் பிரபுக்கள் மூலம் நமக்கு கிடைக்கும் இரண்டாம் பாடம், பேச்சை நம்பி ஏமாறக் கூடாது என்பது.

துரோகத்தின் அடையாளங்களான கிபியோனின் குடிகள்,

தோற்றத்திலே ஏமாற்றினது போதாதென்று பேச்சிலும் ஏமாற்றியிருக்கிறார்கள். தங்கள் முயற்சியில் தோற்று விடக் கூடாது என எண்ணி கவனமாக தங்களை ஆயத்தமாக்கியுள்ளார்கள். **ஒளியின் பிள்ளைகளைப் பார்க்கிலும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் புத்திமான்களாயிருக்கிறார்கள்** (லூக்கா 16:8) என்பதற்கு கிபியோனியர் அத்தாட்சியாயிருக்கிறார்கள். அவர்கள் கில்காலில் இருக்கிற பாளையத்துக்கு யோசுவாவினிடத்தில் போய் அவனையும் இஸ்ரவேல் மனுஷரையும் நோக்கி; **நாங்கள் தூர தேசத்திலிருந்து** வந்தவர்கள், எங்களோடே **உடன்படிக்கை பண்ணுங்கள்** என்றார்கள்.

அவர்கள் வஞ்சக பேச்சின் ஒரு கட்டத்தில், அவர்களின் கபடத்தை சற்று மோப்பம் பிடித்த இஸ்ரவேல் மனுஷர் அந்த ஏவியரை நோக்கி: **நீங்கள் எங்கள் நடுவிலே குடியிருக்கிறவர்களாக்கும், நாங்கள் எப்படி உங்களோடே உடன்படிக்கை பண்ணலாம்** என்றார்கள்? (9:7) கிபியோனின் இந்தத் திருட்டுக் கூட்டம் அதற்கு நேரிடையாக பதில் சொல்லாமல், **யோசுவாவை நோக்கி, நாங்கள் உமக்கு அடிமைகள் என்றார்கள்.** இந்த இடத்திலே யோசுவாவை சுத்தமாகக் கவிழ்த்து விட்டார்கள். போதாக்குறைக்கு, யோசுவாவின் தேவனைவேறு புகழுகிறார்கள். **உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய நாமத்தின் பிரஸ்தாபத்தைக் கேட்டு**, உமது அடியாராகிய நாங்கள் வெகுதூர தேசத்திலிருந்து வந்தோம். **அவருடைய கீர்த்தியையும்,** அவர் எகிப்திலே செய்த யாவையும்... கேள்விப்பட்டோம். (யோசுவா 9 :8,9). இது போதாதா ஒரு தேவ மனிதன் கவிழ்வதற்கு? இங்கேயே எல்லாம் முடிந்து விட்டது. கிபியோனியர் எவ்வளவு புத்திசாலிகள் பாருங்கள்!

அன்பானவர்களே! இன்றைய கிறிஸ்தவ உலகில் ஏமாற்றுப் பேச்சும், தந்திரப் பேச்சும் சுதந்திரமாக வலம் வருகிறதா, இல்லையா? அதுவும், நாங்கள் உமக்கு அடிமைகள் அதாவது, நீங்கள் சொல்லுகிறபடி நாங்கள் கேட்போம் என்று அனுசரணையான வார்த்தைகள் வஞ்சிக்கும் ஊழியக்காரர்களிடமிருந்து வரும்போது முழு குடும்பமும் கவிழ்ந்து அசத்தியத்திற்கு தங்களை அப்படியே ஒப்புக்கொடுத்து விடுகிறார்களே! அதனால் தானே, கிறிஸ்துவின் போதனைகளுக்கும், அப்போஸ்தலருடைய உபதேசத்துக்கும் துளியும் மதிப்பளிக்காமல் **தெய்வீக பக்தி விருத்திக்கு ஏதுவாயிராதவைகளைத் துணிந்து பேசும் தேவ மனிதர்கள் என்று சொல்லித்திரியும் கள்ளத் தீர்க்கதரிசிகளுக்குப் பின்னால் திரளான கூட்டம் செல்லுகிறது.**

மறுபடியும் சொல்லுகிறேன், நல்லவர்களும், தேவனை உண்மையாகவே நேசிப்பவர்களும் இச்சூழல் காற்றில் யோசுவாவைப் போல் அடித்துச் செல்வதைப் பார்க்கும் போது நெஞ்சு பதறுகிறது. இன்னும் எத்தனை காலம் என்ற கேள்வி ஆழ் மனதில் எழவே செய்கிறது. **கர்த்தருடைய வாக்கைக் கேளாமல்** போகும்போது

எப்படிப்பட்ட விபரீதங்கள் ஆன்ம ரீதியாக ஏற்படுகிறது பாருங்கள்! இவைகளையெல்லாம் தடுத்து நிறுத்தி நீதியைச் செய்வதற்கான ஒரே வழி, கர்த்தரின் வார்த்தைகளைக் கேட்பதுதான். புதிய ஏற்பாட்டில் உள்ள கர்த்தரின் வார்த்தைகளை மாத்திரம் கேட்போமா? சீரான வழியில் நடப்பதற்கும், நீதியான காரியங்களைச் செய்வதற்குமான ஒரே வழி **கர்த்தரின் வார்த்தைகளுக்குச் செவி கொடுப்பது தான்.** மனிதர்கள் எப்படிப் பேசினாலும் நாம் அதற்கு இணங்க வேண்டிய அவசியமில்லை. 3000 பேரை இரட்சித்த அந்த மகாப் பிரசங்கத்தை ஆரம்பிக்கும் போது என் வார்த்தைகளுக்கு, அதாவது கர்த்தரின் வார்த்தைகளுக்கு **செவி கொடுங்கள்** (அப். 2:14) என்றே கூறி ஆரம்பித்தார். ஆகவே, நாம் ஒவ்வொருவரும் மனித பேச்சுக்கு மயங்காமல், கர்த்தரின் வார்த்தைகளுக்குச் செவி கொடுப்போம்.

**III. கிபியோனின் குடிகள் உடன்படிக்கை செய்ய வற்புறுத்தினார்கள்.**

கர்த்தரின் வாக்கைக் கேளாமல், வஞ்சிக்கப்பட்ட யோசுவா மற்றும் இஸ்ரவேல் பிரபுக்கள் மூலம் நமக்குக் கிடைக்கும் இன்னொரு பாடம் ஏமாந்து உடன்படிக்கை செய்யக்கூடாது என்று.

தங்கள் தோற்றத்தின் மூலம், தங்கள் பேச்சின் மூலம் ஏமாற்றியது போதாதென்று எண்ணி தங்களோடு யோசுவாவும், இஸ்ரவேலரும் **உடன்படிக்கை பண்ண வேண்டுமென்றும் வற்புறுத்தினார்கள்.** இந்தக் கீழ்க் குணம் கொண்ட கிபியோனியர்களுக்கு உடன்படிக்கை இல்லையேல், ஒரு கட்டத்தில் சாயம் வெளுக்கும் போது விரட்டியடிக் கப்படுவோம் என்பது தெரிந்திருந்தது. ஆகவே, உடன்படிக்கை செய்துவிட்டால் தேவனுக்குப் பயப்படும் இவர்கள் அதை மீறமாட்டார்கள் என்ற உண்மையைத் தெரிந்து வைத்திருந்தார் (எண். 30:2). ஆகவே, புதுப் பொய் மூட்டைகளை அவிழ்த்து விட்டனர். ஆகையால் எங்கள் மூப்பரும், எங்கள் தேசத்து குடிகள் எல்லாரும் நோக்கி... எங்களோடே உடன்படிக்கை பண்ண வேண்டுமென்று சொல்லச் சொன்னார்கள். உங்களிடத்தில் வர நாங்கள் புறப்படுகிற அன்றே, எங்கள் வழிப் பிரயாணத்துக்கு இந்த அப்பத்தைச் சுடச்சுட எங்கள் வீட்டிலிருந்து எடுத்துக் கொண்டு வந்தோம்; இப்பொழுது, இதோ உலர்ந்து பூசணம் பூத்திருக்கிறது. நாங்கள் இந்தத் திராட்ச ரசத் துருத்திகளை நிரப்புகையில் புதிதாயிருந்தது. ஆனாலும், இதோ கிழிந்து போயிற்று. எங்கள் நெடுந்தூரமான பிரயாணத்தினாலே பாதரட்சைகள் பழசாய்ப் போயிற்று என்றார்கள். (யோசுவா 9:11–13).

எப்படியாவது இஸ்ரவேலரைப் பொறியில் சிக்க வைத்து, உடன்படிக்கை செய்து விட்டால் பிறகு **தாங்கள் பாதுகாப்பாக இருக்க** முடியும் என்று தீர்மானத்துடன் செயல்பட்டனர். இந்த இழிபிறவிகளுக்குத் தங்கள் **நலனும், பாதுகாப்பும்** தான் பெரிதாகத் தெரிந்ததேயொழிய, பிறரை மனதார ஏமாற்றுகிறோமே, நம்ப வைத்துக் கழுத்தை அறுக்கிறோமே என்ற உணர்வு மருந்துக்குக் கூட இல்லை. எப்படிப்பட்ட ஜென்மங்கள் பாருங்கள்! மனசாட்சியற்ற இந்த மனிதர்

தேவ பக்தியுள்ளவர்களை லாவகமாக ஏமாற்றி தங்கள் முயற்சியில் வெற்றியும் பெற்றுவிட்டனர். எப்படியெனில், அப்பொழுது இஸ்ரவேலர்: **கர்த்தருடைய வாக்கைக் கேளாமல்,** அவர்களுடைய போஜன பதார்த்தத்தில் வாங்கிக் கொண்டதோடு யோசுவா **அவர்களோடு சமாதானம் பண்ணி** அவர்களை உயிரோடே காப்பாற்றும் **உடன்படிக்கையை அவர்களோடே பண்ணினார்;** அதற்காக சபையில் பிரபுக்கள் அவர்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்தார்கள் [யோசுவா 9:14,15]. அதற்குப் பிறகு, உண்மை தெரிந்தும் செய்து கொண்ட உடன்படிக்கையினிமித்தம் அவர்களைத் தங்கள் நடுவில் குடியிருக்க அனுமதித்து, அவர்களை ஏற்று சகிக்க வேண்டியதாயிற்று.

அருமையானவர்களே! நம்முடைய நாட்களிலான கிறித்துவ த்தின் நிலையை இது ஒரு வகையில் அப்படியே பிரதிபலிப்பதாக இல்லையா? தங்கள் **வாழ்வும், வருமானமும் பாதுகாப்பாக** இருக்க வேண்டுமென்பதில் மாத்திரம் குறியாக இருக்கும் பல கீழ்க்குணம் கொண்ட மனிதர்கள், தங்களை தேவனுக்கு ஊழியம் செய்கிறவர்கள் என்று சொல்லிக் கொண்டு கிபியோனின் குடிகள் போல அதற்கான தோற்றம் மற்றும் பேச்சுக்களை ஆதாரமாகக் காட்டி, வஞ்சகம் மற்றும் நயவசனிப்பான பேச்சுகளால் ஏமாற்றி அவர்களைத் **திருமுழுக்கு உடன்படிக்கைக்குள்** வரவழைத்து, தங்கள் கூட்டத்தில் அங்கமாக்கி அங்கேயே கட்டிப்போட்டு விடுகின்றனர். யோசுவாவும் அவனோடிருந்த வர்களும் உண்மை தெரிந்த பிறகும் உடன்படிக்கை செய்து கொண்டதினிமித்தம் ஒன்றும் செய்ய முடியாமல் குறைகள் பல இருந்தாலும், அவை வெளியே தெரிய வந்தாலும், சிரமத்துடன் சீரணித்து வாழ்ந்து வந்தனர்.

இன்றைக்கும் பல தேவ பக்தியுள்ளவர்கள் இப்படித்தான் கள்ளப் போதகர்களாலும், கள்ள உபதேசங்களாலும் **கர்த்தரின் வார்த்தை களைக் கேளாமல் வஞ்சிக்கப்பட்டு** என்ன செய்வது இங்கே தான் ஞானஸ்நானம் பெற்றோம், இதுதான் எங்கள் பாரம்பரிய சபை, இங்குதான் எங்கள் உறவுகள் இருக்கிறார்கள், இங்கு தான் எனக்குப் பிரியமான ஆட்டம், பாட்டம் கிடைக்கிறது என்றெல்லாம் எண்ணி வாளாயிருக்கின்றனர். ஒருவேளை இந்த சிந்தை இவ்வுலக வாழ்க்கைக்கு சரியாகப் பட்டாலும், நியாயத்தீர்ப்பின் நாளில் நிச்சயமாகச் செல்லுபடியாகாது. உடன்படிக்கை செய்து கொண்டோம் என்று அங்கு சொல்ல முடியாது. **ஏன் என் வாக்கைக் கேளாமல் போனீர்கள் என்று கேட்கப்பட்டு, என்னை விட்டு அகன்று போங்கள் என்று விரட்டப்படுவோம்** [மத். 7:23]

ஆகவே, நம்முடைய நித்தியத்தைத் தீர்மானிக்கும் கர்த்தரின் வார்த்தைகள் அடங்கிய கிறிஸ்துவின் உபதேசங்களுக்கு நம்மை சமூலமாகக் கீழ்ப்படுத்தி வாழ்வோம். ஆமென்!!

✝

# நாம் யாரை ஆராதிக்க வேண்டும்?

J.C சோட்

சகலமும் படைக்கப்பட்ட நாளிலிருந்து சூரியனுக்குக் கீழே உள்ள அனைத்தையும் மனிதன் தொழுது வந்திருக்கிறான். ஏன், அந்த சூரியனையும் கூட அவன் விட்டுவிடவில்லை. உலகைச் சுற்றிலும் இலட்சக்கணக்கான தேவர்களும், தேவதைகளும் இருக்கின்றனர். எண்ணிலடங்காத கோயில்களை அவைகளின் பக்தர்கள் கட்டி வைத்துள்ளனர் என்ற போதிலும், தங்களுடைய மதத்தை பற்றி பல மக்கள் திருப்தியாக இருப்பதாகத் தெரியவில்லை. ஏன்? என்ன தவறு நடத்துள்ளது?

ஜீவனுள்ள ஒரே உண்மையான தேவனை மக்களில் பலர் இன்னும் விசுவாசிக்கத் தொடங்காததுதான் தவறு. கிறிஸ்து தேவனைப் பற்றிக் கூறும் போது, ''தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ளவேண்டும் என்றார்'' (யோவான் 4:24) எனவே, மனிதன் தொழுது கொள்ள வேண்டியவர் தேவன் மட்டுமே. இதை அவன் அறிந்து கொண்டு, தேவனைத் தொழுது கொள்ளத் தொடங்கும்போதுதான், இதுவரை அவன் தேடிக்கொண்டிருந்த சமாதானமும் ஆறுதலும் அவனுக்குக் கிடைக்கும்.

தேவன் யார் என்றும், அவரை நாம் ஏன் தொழுது கொள்ள வேண்டுமென்றும் இப்பாடத்தில் பார்ப்போம்.

**1. தேவன் சகலவற்றையும் படைத்தவர் :**

ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்'' (ஆதி. 1:1) என்று வேதாகமம் கூறுகிறது. அதைத் தவிர வேறு சான்று என்ன என விவாதிக்க கூடும். உங்களைச் சுற்றிலும் கொஞ்சம் பார்த்து, தேவன் என்னவெல்லாம் படைத்திருக்கிறார் என்பதைக் கவனியுங்கள். உலகமும் அதில் உள்ள சகல பொருட்களும் தேவன் இருக்கிறார் என்பதற்கான தக்க சான்றாக இருக்கிறது. ஒன்றுமில்லாததில் இருந்து எதுவும் வர இயலாது. எனவே, யாராவது அதைப் படைக்க வேண்டும். வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது' என தாவீது கூறினார். (சங். 19: 1) இதை மறுத்துக் கூற யாரால் இயலும்? யார் சர்ச்சை செய்வர்?

தமது சொந்த சாயலாக மனிதனையும், மனுஷியையும் தேவன் படைத்தார். 'பின்பு தேவன் நமது சாயலாகவும், நமது ரூபத்தின் படியேயும் மனிதனை உண்டாக்குவோமாக. அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக

ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின் மேல் ஊரும் சகல பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனிதனை சிருஷ்டித்தார்; அவனை தேவ சாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும், பெண்ணுமாக சிருஷ்டித்தார். [ஆதி. 1:26,27] தேவனாகிய கர்த்தர் மனிதனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனிதன் ஜீவாத்துமாவானான் [ஆதி. 2:7].

**2. மனிதனுடைய பாவங்களிலிருந்து அவனை இரட்சிக்கத் தமது குமாரனாகிய இயேசுவை தேவன் அனுப்பினார்.**

'தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்' [யோவான் 3:16,17] என கர்த்தர் வந்ததின் காரணத்தைப் பற்றி நாம் படிக்கிறோம். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே. தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்'' என பவுல் எழுதினார். [ரோமர் 5:8] மீண்டுமாகப் பவுல் கூறுகிறார் 'நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும். பிரியமுமாயிருக்கிறது. எல்லா மனிதரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவரா யிருக்கிறார் என்று [1தீமோ. 2:3,4]. நமது இரட்சிப்பைப் பற்றி அவர் எழுதுகிறார் : கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல. [எபேசியர் 2:8, 9].

**3. சரீர, ஆத்தும ஆசீர்வாதங்கள் அனைத்தையும் அளித்து தேவன் நம்மை ஆசீர்வதிக்கிறார்.**

நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது: அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை என யாக்கோபு எழுதுகிறார். [யாக்கோபு 1:17]. மேலும், பவுல் கூறுகிறார், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்: அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.' [எபே. 1:3].

**4. ஒரே ஜீவனுள்ள உண்மையான தேவனாயிருக்கிறார்.**

தேவன் ஒருவராயிருக்கிறார் என்பது பற்றி பவுல் அறிவித்தார்; எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார்

மேலும், எல்லாரோடும் உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர் (எபேசியர் 4:6) தொடர்ந்து அவர் கூறும்போது, தேவன் ஒருவரே, தேவனுக்கும். மனிதனுக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே என்றார். (1 தீமோ. 2:5).

**5. தேவன் ஆவியாயிருக்கிறார்.**

நாம் ஏற்கனவே யோவான் 4:24–ல் தெளிவாகப் படித்தபடி தேவன் ஆவியாக இருக்கிறார். வேறுவிதமாகக் கூறினால், தேவன் மாமிசம், இரத்தம் உடையவரல்ல, அவர் சரீரமுள்ளவரல்ல. அவர் உலகப் பூர்வமானவரல்ல. எனவே, அவரை நாம் ஆவியென்று அறிந்து கொள்கிறபோது, இவ்வுலகத்திற்கடுத்தவர் அல்ல என்பதையும், வேறு இடத்தைச் சார்ந்தவர் என்றும் நாம் அவரை நன்கு புரிந்து கொள்ள இயலும்.

**6. தேவன் அன்பாக இருக்கிறார்.**

அன்பில்லாதவன் தேவனை அறியான். தேவன் அன்பாகவே இருக்கிறார். தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் இவ்வுலகத்தில் அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. பிரியமானவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்பு கூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாக இருக்கிறோம்' என யோவான் அறிவித்தார் (1 யோவான் 4:8– 11) எனவே, நம்மில் அன்பில்லாவிட்டால் தேவனை நாம் அறிய முடியாது. ஏனென்றால், தேவன் அன்பின் வழியாகவே தம்மை வெளிப்படுத்தியுள்ளார் என்று அவர் கூறுகிறார்.

**7. தேவன் இன்று ஜீவிக்கிறார்**

கிறிஸ்துவை ஜீவனுள்ள தேவனின் குமாரன் என பேதுரு அறிக்கை செய்தார். (மத்தேயு 16:18) ஜீவனுள்ள தேவனின் சபையைப் பற்றி பவுல் கூறுகிறார். (1 தீமோ. 315) மீண்டும் விக்கிரக ஆராதனையை விட்டு விலகி, ஜீவனுள்ள உண்மையான தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவருக்கே ஊழியஞ் செய்ய முன் வந்த மக்களைப் பற்றி அவர் கூறுகிறார் (1 தெச. 1:9) தேவன் மரித்துவிட்டார் என அறிவிக்கும் சிலர், தாங்களே ஆயியில் மரித்துப் போனவர்களாகக் காணப்படுகின்றனர். தேவன் ஜீவிக்கிறார். 'தேவண் மரித்தோருக்குத் தேவனாயிராமல். ஜீவனுள்ளோருக்குத் தேவனாய் இருக்கிறார்... என கிறிஸ்து உபதேசித்தார். (மத். 22:32).

**8. தேவனால் எல்லாம் கூடும்.**

யார் இரட்சிக்கப்படக்கூடும் என்பது பற்றி மக்களிடம் இயேசு பேசிக் கொண்டிருக்கையில், அவர் கூறினார்... மனிதரால் இது கூடாதது தான்; தேவனாலே எல்லாம் கூடும்... என்று (மத்தேயு 19:26).

பெண்கள் பகுதி

# *யாருக்கு முன்னால் நீ நிற்கிறாய் என்பதை தெரிந்துகொள் !*

Sis. *ரேச்சல் நாயகம்*

***கி***றிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகள் யாவருக்கும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே வாழ்த்துதல்களையும், ஸ்தோத்திரங்களையும் செலுத்துகிறேன். இம்மாதம் நாம் யாரை நம்பி வாழ்ந்து, யாரைச் சார்ந்து நின்றுகொண்டிருக்கிறோமோ அவர் யார், தன்மை என்ன, வல்லமை என்ன, பராக்கிரமம் என்ன என்பதை பல நேரங்களில் தெரிய வேண்டிய அளவு தெரியாமல் வாழ்ந்து கொண்டுள்ளோம். பழைய ஏற்பாட்டிலே ஆகமங்கள் வாசிக்கப்படும் பொழுதுகூட எப்படி வாசிக்கப்பட வேண்டும் என்று கட்டளை பெற்றிருந்தார்கள். வேதத்திலே நாம் அதை வாசிக்க முடியும்.

நாம் அனைவரும் அறிந்த சம்பவம் யாத். 3:1–5 வசனப் பகுதி. மேலும், யோசுவா 5:13–15 வசனப்பகுதியிலும், **நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி** என்ற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளதை முக்கியமாக, கட்டாயமாக, கவனமாக நாம் கவனித்தே ஆக வேண்டும். இந்தப் பதத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ள பாடம் என்ன இருக்கிறது? நிறைய இருக்கிறது! ஆனால், பிரதானமான ஒன்று எதுவென்றால் **நாம் யாருக்கு முன்னால் நிற்கிறோம்** என்பதை தெரிந்து கொள்ளவேண்டும். வல்லமையான வேத வார்த்தைகளை வாசிக்கும் போதும், அதைக் கையாளும் போதும் மகத்துவமான தேவனுடைய பிரசன்னம் அங்கே இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்வது அவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது.

யெகோவா தேவனுக்கு முன்பாக நாம் நிற்கிறோம்! சர்வவல்ல தேவன், இருக்கிறவராகவே இருக்கிறேன் என்பவருக்கு முன்பாக நாம் நிற்கிறோம்! நாம் வேதாகமத்தைத் திறந்து, அந்த அற்புதமான புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டும்போதும் நம் சிருஷ்டிகர் தம் வாயைத்திறந்து தனிப்பட்ட முறையில் நம் ஒவ்வொருவரிடமும் பேசுகிறார். வாழ்க்கையை மாற்றக்கூடிய செய்தி அவரிடத்திலிருக்கிறது, யார் கவனிக்கப் போகிறார்கள் என்று எண்ணாமல் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய மூவரும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நாம் அவரை ஆராதிக்கும் போது நம்மோடு இருக்கிறார்கள் என்ற உண்மையை நம்மால் உணர முடிகிறதா ?

தீவிரமாக உணர்ந்து சிந்திக்க வேண்டிய ஒன்று **நாம் பரிசுத்த பூமியில் நிற்கிறோம்** என்பது.

நம்மையுமறியாமல் நம்முடைய நிலைக்கு எல்லாவற்றையும் இறக்கி கொண்டு விட்டு, சமுதாயத்தையே ஒரு செயல்பட முடியாத ஊமைத்தனமான நிலைக்கு தள்ளிவிட்டதுபோல, நம்முடைய பரலோகப் பிதாவையும் அவருடைய தன்மை நீர்த்துப் போகும்படியாகச் செய்து கொண்டிருக்கிறோம். போகிற போக்கிலே நம் சமுதாய மக்கள் அவரிடம் பேசச் செல்லும்போது ஹாய், தகப்பனே என்று ஏதோ வழியிலே செல்லும் ஒரு மனிதனுடைய நிலைக்கு குறைத்து விடுகிறோம். அவர் தேவன். மனிதன் அல்ல, அவர் தனிச்சிறப்புள்ள இருக்கிறவராக இருக்கிறவர்.

இன்றைக்கு எத்தனை கிறிஸ்தவர்கள் உண்மையாகவே தேவனை அறிந்து, யார் அவர்? வேதத்தில் நமக்கு என்ன சொல்லியிருக்கிறது என்பதை தெரிந்திருக்கிறார்கள்? மீண்டுமாக சொல்லுகிறேன். சத்திய முத்துக்களைத் தேடும் சிலர் இருக்கவே செய்கிறார்கள். சில பேர் ஆண்களிலாகட்டும், பெண்களிலாகட்டும் வேதத்தை ஆழமாகச் சென்றுதேடி, வசித்து, ஜெபத்திலே தேவனோடு உறவாடி, தேவன் யார் என்பதை தெரிந்து கொள்கிறார்கள். இது பேச்சில் வராது. கடினமான உழைப்பு, பிறகு தேவனை எப்படி பிரியப்படுத்தலாம் என்ற ஆசை இருந்தால் மட்டுமே இது சாத்தியமாகும்.

என் மகனே, நீ உன் செவியை ஞானத்திற்குச் சாய்த்து, உன் இருதயத்தைப் புத்திக்கு அமையப்பண்ணும் பொருட்டு, நீ என் வார்த்தைகளை ஏற்றுக் கொண்டு என் கட்டளைகளை உன்னிடத்தில் பத்திரப்படுத்தி, ஞானத்தை வா என்று கூப்பிட்டு, புத்தியை சத்தமிட்டு அழைத்து, அதை வெள்ளியைப்போல் நாடி, புதையல்களைத் தேடுகிறதுபோல் தேடுவாயாகில் அப்பொழுது கர்த்தருக்குப் பயப்படுதல் இன்னதென்று நீ உணர்ந்து, தேவனை அறியும் அறிவைக் கண்டடைவாய். கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும் (நீதி. 2:1–6).

பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், பரிசுத்த ஆவியாகிய தேவன் நம்மில் அன்புகூர்ந்ததினால் அவர்களுடைய பாதத்தில் அமர்ந்து தடவியாகிலும் கற்றுக் கொள்ள மாபெரும் வாய்ப்பும், அழைப்பும் நமக்குத் கொடுக்கப்பட்டுள்ளது. கேள்வியென்ன வெனில், நம்முடைய சுயநலத்திலிருந்து சுயமாக வெளியே வந்து நேரத்தை கண்டுபிடிக்கிறோமா? நம்முடைய வாழ்வில் தேவனை முதன்மையாக முன்னுரிமையாக வைத்துள்ளோமா?

தேவனுடைய அன்பை ஏசாயா 1:18 –ல், பார்க்கும் போது, **வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.** தேவன் நம்மை ஒருபோதும் கட்டாயப்படுத்தி திணிப்பதும், அதிகாரம் செய்வதும் இல்லை. உட்காருங்கள் இப்பொழுது அழாமல் இருங்கள், அமைதியாய் இருங்கள், என்னிடத்தில் கவனித்து கேட்டு கற்றுக் கொள்ளுங்கள்! என்கிறார். மட்டுமல்லாமல், சதாகாலமும் இருக்கும் விருந்துக்கு நம்மை அழைக்கிறார். அவர் நியாயமானவர் நம்மையும் நியாயமாய் இருக்கும்படி கேட்கிறார்.

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! யாருக்கு முன்பாக நாம் நிற்கிறோம் என்பதை தெரிந்து கொள்வோம். தேவன் நல்லவராக இருப்பதினால் அருமையானவர்களே, பயபக்தியுடனும், பிரமிப்புடனும் அவருடைய நாமத்தை தொழுது கொள்வோம். வேதத்தை திறந்து சங். 100 ஐ வாசிக்கும்படி அன்பாய் கேட்டுக் கொள்கிறேன். தேவனுக்கு ஸ்தோத்திரம். ஆமென்!!! ✝

---

## கர்த்தர் யாரை, கைவிடமாட்டார்?

*1. நீதிமானை - (சங் 37:25).*

*2. கர்த்தரை தேடுகிறவர்களை - (சங் 9:10)*

*3. பரிசுத்தவான்களை - (சங் 37:28)*

*4. தம்முடைய ஜனத்தை -(சங் 94:14)*

*5. சிறுமையும் எளிமையுமானவனை - (ஏசா 41:17)*

*6. கர்த்தரை தன் தேவனாக கொண்டவர்களை - (உபா 4:31)*

வாலிபர் பகுதி

# *உங்கள் நீதி...*

**Dr. ஏபில் நாயகம்**

**கி**றிஸ்துவுக்குள் பிரியமான வாலிப சகோதரர்களே, உங்கள் யாவருக்கும் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த மாதமும் உங்களை இந்த இதழின் மூலம் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஒரு நல்ல கிறிஸ்தவ வாழ்க்கை என்பது அனுதினமும் வளருகின்ற, வளர்ச்சியை விரும்புகின்ற ஒன்றாக இருக்க வேண்டும். அந்த வகையிலே, நமக்கு உதவியாக இருப்பது பரிசுத்த ஆவியின் ஏவுதலினாலே நமக்கு கிடைக்கப் பெற்ற தேவனுடைய வார்த்தைகள் தான். சங்கீதக்காரன் சொல்லுவது போல இரவும், பகலும் கர்த்தருடைய வேதத்தில் நாம் பிரியமாய் இருந்து அதை தியானிக்கும் போது நாம் வளர்வதற்கு, வளர்ந்து பாக்கியவானாக ஆவதற்கு வேதாகமம் உதவியாக இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். யோவான் 5: 39 இல், வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு என்று இயேசு கிறிஸ்து கூறியிருப்பதையும் நாம் கவனிக்க வேண்டும். ஆக, கிறிஸ்தவ வளர்ச்சிக்கு தேவனுடைய வார்த்தைகளை தியானிப்பது அவசியம். தேவனுடைய வார்த்தைகளை தியானிக்கும் போது நித்திய ஜீவன் நிச்சயம். அப்படி என்றால் **ஒருவர் வளராமல்** நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ள இயலாது என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, மலைப் பிரசங்கத்தின் மையம் அல்லது கருப்பொருள் என்றென்னப்படுகிற மத்தேயு 5: 20 ஆம் வசனத்தில் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க தேவையான ஒரு தரநிலையை சொல்லி இருப்பதை நாம் கவனிக்க வேண்டும். அது என்னவென்றால் **வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்** என்பது.

மலைப்பிரசங்கம் என்பது எல்லோராலும் அதிக வியப்புடன் பார்க்கப்படுகிற ஒரு வேதாகம பகுதி. யோவானாலே ஞானஸ்நானம் பெற்று தன்னுடைய ஊழியத்தை ஆரம்பித்த இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளை கேட்டும், செயல்பாட்டை பார்த்தும் பலர் அவருக்கு பின் வந்ததை நாம் வாசிக்க முடியும். (மத்தேயு 5:1). தன்னுடைய ஊழிய நாட்களின் ஆரம்பத்திலேயே திரளான ஜனங்கள் இவருடைய போதனையினாலே ஈர்க்கப்பட்டு அவரைப் பின்தொடர்ந்தார்கள்.

பாக்கிய வசனங்கள் என்று எல்லோரும் அறியப்பட்டிருக்கிற எட்டு வாக்கியங்களை அவர் சொல்லிய பின், தம்மைப் பின்பற்றி வர விரும்புகிறவர்கள் உப்பாகவும் ஒளியாகவும், இருக்க வேண்டும் என்று

உபதேசித்தார். முதல் 16 வசனங்களில் தேவனுக்கு பிரியமான குணாதிசயங்களை உடையவர்களாக இருக்க வேண்டும் என்றும், அந்த குணாதிசயங்களின் வெளிப்பாடாக வருகிற நம்முடைய நன் நடத்தை, நற்கிரியைகள் யாவையும் பிறர் காணும் போது , அதன் மூலம் பரலோகத்தில் இருக்கிற பிதாவிற்கு மகிமை சேர்க்க வேண்டும் என்றும் அறிவுரைகளை வழங்கினார்.

இந்த அறிவுரைகளை கூறிய பின், தம்மைப் பின்பற்றி வந்த ஜனங்கள் திடுக்கிடும்படியாகவும், ஆச்சரியப்படும்படியாகவும் ஒரு அறிவுரை வழங்கினார். அதைத்தான் மலை பிரசங்கத்தின் மையம் என்று நாம் சொல்கிறோம் (மத்தேயு 5:20). இந்த வசனத்தின் வார்த்தைகளை ஜனங்கள் கேட்டவுடன் அவர்களுக்கு நிச்சயமாக ஒரு அதிர்ச்சி ஏற்பட்டிருக்கும். அது ஏன் என்றால், இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக, ஜனங்களாலே உயர்வாக பார்க்கப்பட்ட நபர்களாகிய வேதபாரகர் பரிசேயர் பற்றி இயேசு இப்படி பேசியது தான்.

ஜனங்களை நியாயப்பிரமாணத்தின்படி வழிநடத்துகிற பொறுப்பைக் கொண்டவர்களாகவும், ஜனங்களுடைய அன்றாட வாழ்க்கையின் காரியங்களுக்கு உதவியாகவும், பலராலே மதிக்கப்பட்டவர்களாகவும், இன்னும் சிலருக்கு முன்மாதிரிகளாகவும் வேதபாரகர், பரிசேயர் விளங்கினார்கள். எனவே, ஜனங்களால் உயர்வாக பார்க்கப்பட்ட வேதபாரகர் பரிசேயர் இவர்களுடைய நீதியை காட்டிலும் உங்கள் நீதி அதிகமாக இருக்க வேண்டும் என்று இயேசு சொன்ன பொழுது, நிச்சயமாகவே ஜனங்கள் ஆச்சரியப்பட்டு இருப்பார்கள். நூதனமான காரியமாகவும், ஜனங்களை ஆச்சரியப்படுத்தும் விதமாகவும் இது இருக்கும் என்று அறிந்த இயேசு, ஏன் அப்படி சொன்னார் என்பதை கீழே உள்ள வசனங்களிலே விவரிப்பதை நம் வாசிக்க முடியும். மத்தேயு 23 ஆம் அதிகாரத்திலே இயேசு வேதபாரகர், பரிசேயர் ஆகிய இவர்களை கடுமையாக சாடுவதை நாம் வாசிக்கிறோம். இயேசு அவர்கள் மீது வைக்கும் குற்றச்சாட்டை சுருக்கமாக சொல்ல வேண்டும் என்றால்'' வெளிப்புறமான நீதிக்கு'' அவர்கள் கொடுத்த முக்கியத்துவம் இயேசுவாலே தவறாகப் பார்க்கப்பட்டது. அதை அவர்கள் செய்ததோடு மட்டுமல்ல, அவர்களைத் தேடி வந்த ஜனங்களையும் அப்படியே செய்ய வைத்தார்கள்.

5 ஆம் அதிகாரம் வசனங்கள் 21 – 48 வரை தன்னை பின்பற்றி வந்த ஜனங்களுக்கு வெளிப்புறமாய் தோற்றமளிக்கிற நீதிக்கும் இருதயத்தில் இருந்து ஏற்படுகிற மாற்றத்தின் வெளிப்பாடாக வருகிற நீதிக்கும் இருக்கிற வித்தியாசத்தை விளக்குகிறார். பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்து மலைப் பிரசங்கத்தில் இதை நீங்கள் நிச்சயமாக செய்ய வேண்டும் என்று சொன்ன முதல் காரியம்'' பரிசேயர், வேதபாரகர் இவர்களுடைய நீதியைக் காட்டிலும் நம்முடைய நீதி அதிகமாக இருக்க வேண்டும் என்பது''. அப்படி இதை

செய்யாத பட்சத்தில் பரலோக ராஜ்ஜியத்திற்குள்ளாக பிரவேசிக்க முடியாது என்றும் சொல்லுகிறார். எனவே நாம் இந்த அறிவுரைகளுக்கு முதலிடம் கொடுக்க வேண்டியது அவசியம். ஏனென்றால், இது நம்முடைய நித்திய தோற்றம் சம்பந்தப்பட்டிருக்கிற அல்லது நித்தியத்தை தீர்மானிக்க போகிற காரியமாக இயேசுவாலே பார்க்கப்பட்டது. எனவே நாம் இந்த அறிவுரைகளுக்கு முதலிடம் கொடுக்க வேண்டியது அவசியம். ஏனென்றால், இது நம்முடைய நித்தியத்தை சம்பந்தப்பட்டிருக்கிற அல்லது நித்தியத்தை தீர்மானிக்க போகிற காரியமாக இயேசுவாலே பார்க்கப்பட்டது.

வெளிப்புறமான நீதிக்கும், இருதயத்திலிருந்து ஏற்படுகிற மாற்றத்திற்கும் இருக்கும் வித்தியாசமே நம்முடைய நித்தியத்தை தீர்மானிக்கிறது. வசனம் 21 தொடங்கி 26 வரை நாம் வாசித்தால், **கொலை செய்யாதிருப்பாயாக** என்று மோசேயினால் உரைக்கப் பட்டது என்றும், இப்போது இயேசு கிறிஸ்து'' தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்வதும், தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவனும் எரி நரகத்திற்கு ஏதுவாக இருப்பான் என்று சொல்லுவதை நாம் கவனிக்க முடியும். பிரியமானவர்களே பரிசேயர் வேதபாரகர் ஆகிய இவர்கள், கொலை செய்யாது இருப்பாயாக என்று தானே சொல்லப்பட்டு இருக்கிறது. எனவே, நான் கொலை செய்ய மாட்டேன். ஆனால், என்னுடைய சகோதரனை நான் பகைக்கலாம், கோபித்துக் கொள்ளலாம், தகாத வார்த்தைகளை பேசலாம் என்று நினைத்தார்கள். நியாயப்பிரமாணம் கொலை தானே செய்யக்கூடாது என்று சொல்கிறது. நான் கொலை செய்யவில்லை என்று நினைத்து, நியாயப்பிரமாணத்தை பின்பற்றுகிறவனாக, நியாயப்பிரமாணத்தின் அடிப்படையிலேயே என்னுடைய செயல்கள் நீதியாக இருக்கிறது என்று நினைத்தார்கள். ஆனால் இயேசு, வெளிப்புறமாய் தோன்றுகிற பாவமாகிய கொலை மட்டும் தவறல்ல, இருதயத்திலே ஒரு சகோதரனுக்கு விரோதமாக எழும்புகிற பகையும் அநீதியானது என்று அங்கே போதிக்கிறார்.

அதைப்போல 27 ஆம் வசனம் தொடங்கி 30 வரை நாம் வாசித்தால், விபச்சாரம் என்ற வெளிப்புறமான பாவச் செயலை பற்றி இயேசு விவரிக்கிறார். விபச்சாரம் என்ற செயலை மட்டும் செய்யாமல் இருந்தால் நியாயப்பிரமாணத்தின் அடிப்படையிலேயே என்னுடைய செயல் நீதியாக இருக்கும் என்பது பரிசேயர் வேதபாரகருடைய சிந்தனையாக இருந்தது. ஆனால், அந்த பாவத்திற்கு வித்திடுகிற இச்சை, இச்சையின் வெளிப்பாடாக எழும் தவறான சிந்தை, தவறான பார்வை ஆகிய இவைகள் விபச்சாரம் என்ற செயலுக்கு ஒப்பானது என்று கூறி, விபச்சாரம் என்ற செயலை மட்டும் செய்யாமல் இருந்தால் போதாது, அந்த **பாவம் பிறக்கும் இடமாகிய இருதயத்திலே** மாற்றம் ஏற்பட வேண்டும் என்று கூறுகிறார்.

வசனம் 29, 30 இல், பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க தடையாக

இருக்கும் எந்த ஒரு காரியத்தையும் நம்முடைய வாழ்க்கையில் இருந்து விலக்கிவிட வேண்டும் என்று கூறுகிறார். வலது கண், வலது கை ஆகியவைகள் மனிதனுக்கு மிகவும் முக்கியம் என்று கருதப்படுகிற உறுப்புகள் ஆகும். அதிலும் விசேஷமாக யூதர்களுக்கு வலது கையும் வலது கண்ணும் மிகவும் விசேஷமானது. எனவே, நம்மால் முக்கியம் என்று கருதப்படுகிற ஒரு காரியம், நாம் பரலோகம் செல்வதற்கு தடையாக இருக்கும். ஆனால், அதை விட்டு நாம் விலக வேண்டும்.

வசனம் 34 – 37 வரை வாசித்தால் சத்தியம் பண்ணுதல் என்ற வெளிப்புறமான செயலை செய்வதன் மூலம் பிறருக்கு நம்மில் நம்பகத்தன்மை வரக்கூடாது என்று கூறின இயேசு, உள்ளதை உள்ளதெ என்றும் இல்லதை இல்லதென்றும் சொல்ல வேண்டும் என்று கூறினார். பொய் சொல்லி விட்டு ஒருவராலே சத்தியம் பண்ண முடியும். ஆனால், அது வெளிப்புறமான நீதி. இதயத்தில் அவர் பொய்யை தான் சொல்லி இருக்கிறார். மாற்றம் இருதயத்தில் இருந்து வர வேண்டும்.

ஆக, மலைப் பிரசங்கத்தின் இந்த பகுதியில், இயேசு கிறிஸ்துவானவர் ஜனங்கள், வெளிப்புறமாக தோற்றமளிக்கும் நீதிக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், '' இருதயத்திலே உண்மையுள்ள வர்களாக, மாற்றங்கள் இருதயத்திலே ஏற்பட்டவர்களாக'' தங்கள் வாழ்க்கை நடத்த வேண்டும் என்று கூறுகிறார். பரிசேயர் வேதபாரகர் ஆகிய இவர்களைப் போல, வெளிப்புறமாக தோற்றம் அளிக்கிற செயலினாலே நீதியை தேடாமல், அங்கீகாரத்தை தேடாமல், மரியாதையைத் தேடாமல் , இருதயத்திலே மாற்றம் உள்ளவர்களாக இருதயத்தில் உண்மை உள்ளவர்களாக இருக்கும் போது தான் ஒருவர் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியும் என்று கூறுகிறார்.

அப்படியானால் வாலிபர்களாகிய நாம் நம்முடைய வாழ்க்கையை எதன் அடிப்படையில் நடத்திக் கொண்டிருக்கிறோம்? வெளிப்புறமாக தோற்றம் அளிக்கிற நீதி அடிப்படையிலா அல்லது இருதயத்திலிருந்து தோன்றுகிற நீதியின் அடிப்படையிலா ? வெளிப்புறமாக தோற்றமளிக்கும் நீதி என்பது ஆபத்தானது. உதாரணமாக, உலக ஆசைகளுக்கும், இச்சைக்கும் நாம் அடிபணிந்து விட்டு, என்னிடம் என்னுடைய பெற்றோரும், என்னுடைய சபையரும் எதிர்பார்ப்பது வாரந்தோறும் சபைக்கு வர வேண்டும் நன்றாக பாட வேண்டும் நன்றாக ஜெபம் செய்ய வேண்டும், என்பது தானே, நான் செய்தால் போதும் அவர்களிடம் நான் நற்பெயர் பெற்றுவிட முடியும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் செயல்படுவதாகும்.

பார்ப்பவர்கள் நம்முடைய செயலைப் பார்த்து ஒருவேளை நாம் நீதியானவர்கள் என்று கருதலாம். இருதயத்தை பார்க்கிற தேவனுக்கு தெரியும் உண்மை எதுவென்று. பிரியமானவர்களே, நாம் வெளிப்புறமான நீதிக்கு முக்கியத்துவம் கொடுத்து நம்மை நாமே

ஏமாற்றிக் கொள்ள வேண்டாம். தேவன் விரும்புகிற, இயேசு கிறிஸ்து போதித்த, நம்முடைய நித்தியத்தை தீர்மானிக்கப் போகிற இருதயத்தில் இருந்து தோன்றுகிற நீதியை, வசனத்தின் படி நடக்கிற பொழுது வருகிற நீதியை நாம் விரும்புகிறவர்களாக இருக்க வேண்டும். ஏனென்றால், இது நம்முடைய நித்தியத்தை தீர்மானிக்கப் போகிறது.

வெளிப்புறமான நீதியைத் தேடுகிறவர்களாக நாம் இருந்தால், எப்படி இயேசுவானவர் பரிசேயர், வேதபாரகர் ஆகியவர்களை கடிந்து கொண்டாரோ, அதைப்போல நம்மையும் கடிந்து கொள்வார். மலைப்பிரசங்கத்தின் மையம் அல்லது கருப்பொருள் என்று கருதப்படுகிற இந்த வசனம் இதைத்தான் நமக்கு கற்றுக் கொடுக்கிறது. எனவே, நாம் நம்முடைய வாழ்க்கையை சீர்தூக்கிப் பார்த்து இருதயத்திலே மாற்றம் உள்ளவர்களாக, அந்த மாற்றத்தின் அடிப்படையில் செயல்படுபவர்களாக வாழ நம்மை ஒப்புக் கொடுப்போம். தேவன் தாமே நம்மை வழி நடத்துவாராக ஆமென்.

†

---

## *எப்படிக் கீழ்ப்படிய வேண்டும் ?*

*1) கர்த்தருக்குள் - எபே 6:1*

*2) கபடற்ற மனதோடு - எபே 6:5*

*3) மனப்பூர்வமாய் - ரோமர் 6:17*

*4) கர்த்தர் நிமித்தம் - 1 பேதுரு 2:13*

*5) எப்பொழுதும் - பிலி 2:12*

*6) மரணபரியந்தம் - பிலி 2:8*

சிறுவர் பகுதி

# தாழ்ந்து ஜெபிப்போம்

Dr. ப்ரெய்சி

ஹலோ குழந்தைகளே! நீங்கள் அனைவரும் நன்றாக இருப்பீர்கள் என்று நம்புகிறோம். எங்கள் கட்டுரைகளை ஒவ்வொரு மாதமும் படித்து வருகிறீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். இம்மாதமும் இயேசு சொன்ன வேறே ஒரு உவமையை பார்ப்போம்.

லூக்கா 18–ம் அதிகாரம், இயேசு இரண்டு நபர்களின் ஜெபத்தைப் பற்றிய உவமையைச் சொல்வதைக் காண்கிறோம். தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாயெண்ணுகிற நபரின் ஜெபம் தேவன் விரும்புவதில்லை. பரிசேயர்களின் ஜெபம் அப்படித்தான் இருந்தது. ஆயக்காரன் தூரத்திலே நின்று தன்னைத் தாழ்த்தி தேவனிடம் மன்னிப்புக் கேட்டான்.

அன்பான குழந்தைகளே தேவனின் கிருபையினாலும் இரக்கத்தினாலும் மட்டுமே நாம் இங்கே இருக்கிறோம் என்பதை உணர்ந்து அவருக்கு முன்பாக நாம் தாழ்ந்து இருக்க வேண்டும். நொறுங்குண்ட இருதயள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயி ருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார். ஆகவே, நம்முடைய தவறுகளைப் பார்த்து, அவைகளுக்காக ஜெபிப்போம், பெருமைப்பட்டு மற்றவர்களை நியாயந்தீர்க்க வேண்டாம்.

With love
Praisey akka

**தினமும் காலை எழுந்தவுடன், இரவு படுக்கைக்குச் செல்லுமுன் தனியாகவும், குடும்பத்தோடு சேர்ந்தும் ஜெபிக்கிறீர்களா? ஜெபியுங்கள்!**

கிறிஸ்து என்னும் மார்க்கம் பாடங்கள்

# பொய்யான கிறிஸ்துவின் சபை

*சகோ. ஜே. ஆபகூக் ஜேம்ஸ் ராஜகுமார், சென்னை.*

**முன்னுரை:**

1. ''எக்லீசியா நி கிறிஸ்டோ''வைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; கிறிஸ்துவின் சபையைக் குறித்து சிலர் கேள்விகளை எழுப்புகிறார்கள். அதில் முக்கியமான கேள்வி என்னவென்றால், எது உண்மையான கிறிஸ்துவின் சபை? **எக்லீசியா நி கிறிஸ்டோ** என்பது அவர்கள் மொழியில் கிறிஸ்துவின் சபை (Church of Christ) என்பது ஆகும்.'

2. பரிசுத்த ஆவியானவர் புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தினதை போல, கிறிஸ்துவானவர் மற்றும் அவருடைய அப்போஸ்தலரின் உபதேசத்திற்குக் கீழ்ப்படிந்து நடப்பவர்கள் மட்டும்தான் மெய்யான கிறிஸ்துவின் சபையார் ஆவார்கள்.

3. தேவனுடைய தீர்மானத்தின்படி சபை கிறிஸ்துவுக்கு மாத்திரமே சொந்தமானது; ஏனென்றால், அது அவருடைய வாக்குத்தத்தத்தின் படி நிறைவேறினது, கட்டப்பட்டது. மத். 16 : 18; அப். 2:47,

4. போடப்பட்ட அஸ்திபாரத்தின்படி அது அவருடைய சபை, 1கொரி. 3 : 11; எபே. 2 : 19 – 22; அவரே சபைக்கு தலைவராகவும், மணவாளராகவும் இருக்கிறார். கொலோ. 1: 18; 5: 24–27.

5. அவருடைய பரிபூரணமான சத்தியத்தின் மூலம் கிறிஸ்து சபையை வழிநடத்தி, அதை எல்லாவற்றிலும் ஆயத்தப்படுத்தி, கடைசிநாளில் நியாயந்தீர்க்கப் போகிறார், யாக். 1: 25; யோவா. 16: 13–15; 2தீமோ. 3: 16 – 17; யோவா, 12:48.

**I. ஆனால், சமீபகாலமாக பிலிப்பைன்ஸ் நாட்டைச்சேர்ந்த ஒரு கூட்டத்தார் தாங்கள்தான் மெய்யான கிறிஸ்துவின் சபை என்று சொல்லிக்கொண்டு இந்தியாவிற்குள் நுழைந்திருக்கிறார்கள்.**

A. இன்றைக்கு எது உண்மையான கிறிஸ்துவின் சபை என்பதை வேதவசனங்கள்தான் தீர்மானிக்க வேண்டும். கிறிஸ்துவின் உபதேசத்தின்படி செயல்படாவிட்டால் அது அவருடைய சபை அல்ல. மேலும், எண்ணிக்கை, பணபலம், ஆடம்பரக் கட்டிடங்கள் இருப்பதினால் அது கிறிஸ்துவின் சபை ஆகிவிடாது.

B. பிலிப்பியன்ஸ் நாட்டிலிருந்து வந்திருக்கக்கூடிய இவர்கள் உண்மையான கிறிஸ்துவின் சபையாரல்ல என்பதற்கு அவர்களுடைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள

வாக்குமூலம், உபதேசங்கள் மற்றும் அவர்களின் நடைமுறையின் மூலம் நாம் அறிந்துகொள்ளலாம். (www.incmedia.org)

C. அதன்படி வெளிப்படையாக கிறிஸ்துவின் உபதேசத்திற்கு முரண்பாடான அவர்களுடைய 8 விதமான உபதேச நடைறை காரியங்களை வரிசையாக கவனிக்கலாம்:

D. **முரண்பாடு** 1 .ஒவ்வொரு பிராந்திய கிறிஸ்துவின் சபையானது கிறிஸ்துவை மாத்திரமே தலைவராகக் கொண்டுள்ளது. ஆனால், **இந்த எக்லீசியா நி கிறிஸ்டோ** சபையானது மனிதத் தலைவரைக் (The Executive Minister) கொண்டுள்ளது. அவரே எல்லாவற்றிக்கும் மேலான ஒரு சர்வதிகாரமுள்ள தலைவராய் எல்லா சபைகளையும் கட்டுப்படுத்துகிறவராய் இருக்கிறார் என்று சொல்லப்பட்டுள்ளது. அவருடைய பெயர் Eduardo V. Manalo ஆகும். இது கிறிஸ்துவுக்கு விரோதமான செயல் ஆகும்.

E. மனுஷர்கள் பட்டப் பெயர்களைத் தரித்துக் கொள்வதையும், தங்களைத் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் சமமாக உயர்த்திக் கொள்வதையும் ஆண்டவர் கடுமையாகக் கடிந்துகொள்ளுகிறார். மத்.23:8–11. பிராந்திய சபையின் நடவடிக்கைகளைக் கவனிக்க சபையில் மூப்பர்கள் (கண்காணிகள்) மற்றும் உதவிக்காரர்கள் தகுதியின் அடிப்படையில் பன்மையில் நியமிக்கப்படுகிறார்கள், 1தீமோ. 3 : 1 – 13 ; தீத்.1:5–9

**II. முரண்பாடு 2. இவர்கள் தங்கள் சபையில் ஆராதனை மற்றும் வெவ்வேறு நிகழ்ச்சிகளில் இசைக்கருவிகளைப் பயன்படுத்துகிறார்கள்; பெண்கள் குழுக்கள் மாத்திரம் மேடையில் பாடல்களை பாடுகிறார்கள். இது புதிய ஏற்பாட்டு சத்தியத்திற்கு விரோதமானது.**

A. மெய்யான கிறிஸ்துவின் சபைகளில் இசைக்கருவிகள் பயன்படுத்துவது இல்லை; காரணம் அது பழைய ஏற்பாட்டில் ஒரு கட்டளையாய் இருந்து அது நீக்கப்பட்டது, 2 நாளா. 29: 25 ; சங். 80: 1–4 ; மத். 5:17–18 ; ரோம. 8:4. மேலும், சகோதர்கள் இருக்கும்போது அவர்களோடு இணைந்து சபையில் சகோதரிகள் பாடுகிறார்கள்; மேடையில் அல்ல.

B. மேலும், புதிய ஏற்பாட்டில் நமக்கு இசைக்கருவிகள் பயன்படுத்தும்படி கட்டளை கொடுக்கப்படவில்லை. முதலாம் நூற்றாண்டு சபைகளிலும் பயன்படுத்தப்பட்டதாக எங்கும் உதாரணக் குறிப்புகள் இல்லை. மாறாக, அப்போஸ்தலர்கள் நமக்கு வகுத்துக்கொடுத்த முறைமைகளை மாத்திரம் கைக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளோம். 2தெச. 2: 15

C. ஆனால், இன்றைக்கும் சிலர் இசைக்கருவிகள்

வாசிப்பவர்களோடு தொடர்பு வைத்துக்கொள்வதையும், பொருளாதாரத்தில் அவர்களைச் சார்ந்து இருப்பதையும் நியாயப்படுத்தி வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களையும் புறக்கணிக்க வேண்டும்.

D. **முரண்பாடு 3.** இயேசுகிறிஸ்துவை தேவன் இல்லை என்று இவர்கள் போதிக்கிறார்கள். இது பொய் உபதேசம். ஆனால், வேதாகமம் வார்த்தையானவர் தேவனாய் இருக்கிறார் என்று தெளிவுப்படுத்துகிறது. [யோவா. 1:1]

E. மேலும், அநேக வேதவசனங்கள் அவரை தேவனாகக் கூறுகிறது. [ஏசா.9:6 ; யோவா.20:28 ; அப். 20 : 28 ; ரோமர். 9:5 ; கொலோ. 2: 9 ; 1தீமோ. 3:16 ; தீத்து. 2: 13 ; எபி. 1:8 ; 1யோவான். 5:20]

**III. முரண்பாடு 4. கிறிஸ்துவின் சபை [எக்லீசியா நி கிறிஸ்டோ] 1914 ஜூலை 27ம் தேதி பிலிப்பைன்ஸ் நாட்டின் மணிலா பட்டணத்தில் பேலிக்ஸ் Y. மனாலோ என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது என்கிறார்கள். இதுவும் பொய் உபதேசம்.**

A. ஆனால், கிறிஸ்து தம்முடைய சபையை கி.பி. 33 ல் பெந்தெகொஸ்தே நாளில் அவருடைய சுவிசேஷம் அப்போஸ்தலர்களால் பிரசங்கிக்கப்பட்டு, அன்றைக்கு ஏறக்குறைய 3,000 பேர் இரட்சிக்கப்பட்டு, கர்த்தர் அவர்களை சபையில் சேர்த்துக்கொண்டதினால் சபையை ஸ்தாபித்தார். [அப்.2: 21 – 47]

B. கிறிஸ்துவானவர் நமக்காகப் பாடுபட்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்து, பரமேறிச்சென்று, தேவனுடைய வலது பாரிசத்தில் அமர்ந்து, பரிசுத்த ஆவியானவரை அனுப்பி, அவர் அப்போஸ்தலர்களை பெலப்படுத்தி, அவர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷம் பிரசங்கித்து சபை எருசலேமில் ஆரம்பிக்கப்பட தேவனுடைய திட்டமாய் இருந்தது. பிலிப்பைன்ஸ் மணிலாவில் அல்ல.

C. மேலும், கிறிஸ்து மரித்து, உயிர்த்தெழுந்து பரலோகம் செல்வதால் அவரால் பூமியில் சரீரப்பிரகாரமாக இருந்து தன் சுவிசேஷத்தை பிரசங்கிக்க முடியாது. ஆகையால், அப்போஸ்தலர்கள் பிரசங்கித்தார்கள். இன்னும் கிறிஸ்துவின் சபை அவருடைய ஆவிக்குரிய ராஜ்யமாகவும் உள்ளது. [கொலோ.1:13]

D. **முரண்பாடு 5.** இந்த **எக்லீசியா நி கிறிஸ்டோ** ரோமன் கத்தோலிக்கம் மற்றும் நாமகரண சபைகளைப்போல் பேராயம் (Ecclesiastical Districts), குருசேகரம் போன்ற அதிகார அமைப்புகளைக் கொண்டுள்ளது. இந்த அமைப்பு தேவனுடைய திட்டமல்ல. ஆகவே, இது பொய்யான மனித அமைப்பு.

E. ஒரு பிராந்திய சபை இன்னொரு பிராந்திய சபையின்மேல் அதிகாரம் செலுத்தவோ, கண்காணிக்கவோ புதிய ஏற்பாட்டில் அனுமதியில்லை. ஒவ்வொரு பிராந்திய சபையும் தங்கள் சபையில் தகுதிகளின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட மூப்பர்களைக் கொண்டு கிறிஸ்துவின் தலைமையின் கீழ் அவருடைய புதிய ஏற்பாட்டு சத்தியத்தின்படி இயங்க வேண்டும் (Autonomous).

F. ஆகவே, முதலாம் நூற்றாண்டு காலத்திலேயே ஒவ்வொரு பிராந்திய சபையிலும் மூப்பர்களை ஏற்படுத்தவேண்டும் என்று கட்டளையிடப்பட்டது, அப். 14 : 23 ; 15: 4 ; 1தீமோ. 3: 1– 7 ; தீத். 1:5 – 9. உலக அரசாங்கம் போல நாடு, மாநிலம், மாவட்டம், வட்டம், கிராமம் என்கிற அமைப்பை ஏற்படுத்துவது சத்தியத்தின்படி தவறு.

**IV. முரண்பாடு 6. 'எக்லீசியா நி கிறிஸ்டோ' வினர் ஒரே உயிர்த்தெழுதல் அல்லவென்றும், இரண்டு உயிர்த்தெழுதல் உண்டு என்றும் போதிக்கிறார்கள்.**

A. 1கொரி.15:51 – 52 ல் ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம் என்று சொல்லப்பட்டுள்ளது. இது இரண்டு தடவை நடக்கும் என்று எழுதப்படவில்லை. இதை யோவா. 5: 28 – 29 ; 1தெச. 4 : 13 – 18 ; 2தெச. 1:7–9 ஆகிய வசனங்களும் உறுதிசெய்கிறது.

B. **முரண்பாடு 7. எக்லீசியா நி கிறிஸ்டோவில்** பெண்கள் தலைமைத்துவம் ஏற்று செயல்படுகிறார்கள். ஆனால், சபைகளில் ஸ்திரீகளின் பங்கைக்குறித்து வேதாகமம் தெளிவுப்படுத்துகிறது, [1கொரி. 14:34 – 37 ; 1தீமோ. 2: 11 14]. இந்த வசனங்கள் சபையில் ஆண்கள் இருக்கும்பொழுது பேசக்கூடாது; – தெரிந்துகொள்ள விரும்பினால் தங்கள் புருஷர்களிடத்தில் கேட்டு கற்றுக்கொள்ள வேண்டும். முழுவதுமாக பெண்கள் இருக்கும் கூட்டத்திலும், சிறுவர்களுக்கும் அவர்கள் பேசலாம்.

C. **முரண்பாடு 8.** இவர்கள் வருடத்திற்கு ஒருமுறை மட்டுமே கர்த்தருடைய பந்தி கைக்கொள்ளவேண்டும் என்று போதிக்கிறார்கள். இவர்கள் மத். 26 : 17 ஐ தவறாகப் புரிந்துகொண்டு வருடத்திற்கு ஒருமுறை புளிப்பிலல்ாத அப்பப்பண்டிகை நாளில் மட்டும் கர்த்தர்பந்தி கை கொள்ள வேண்டும் என்று அனுசரிக்கிறார்கள். இது பழைய ஏற்பாட்டின் முறையாய் இருக்கிறது.

D. ஆனால், புதிய ஏற்பாட்டின் காலத்தில் அப். 2, பெந்தெகொஸ்தே நாளிலிருந்து வாரத்தின் முதல் நாளிலே சபை கூடிவரும்பொழுது கிறிஸ்துவின் மரணத்தை நினைவுகூரும்படி கர்த்தருடைய பந்தி அனுசரித்தார்கள். இதற்கு வெவ்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் உதாரணங்கள் வேத வசனங்கள் மூலம் நமக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அப். 2: 46 ; 20:7 ; 1கொரி. 11:20–26.

**முடிவுரை:**

1. கிறிஸ்து தலைவராய் இருந்து, அவருடைய உபதேசத்தின்படி நடந்து கொள்ளுகின்ற சபைதான் உண்மையான கிறிஸ்துவின் சபை. நாம் அப்படிப்பட்ட ஒரு பிராந்திய சபையில்தான் அங்கமாக இருக்கவேண்டும்.

2.இவ்வளவு தெரிந்த கள்ளப்போதனைகளைக் கொண்டுள்ள சபையும் அதன் ஊழியர்களும் எப்படி ஆத்துமாக்களை பரலோகத்திற்கு வழிநடத்தமுடியும் என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

3. இவர்கள் பணத்தைக்காட்டி, சபை கட்டிடம் கட்ட இடம், கட்டடம், ஊழியர்களுக்கு அதிக சம்பளம் போன்ற வாக்குறுதிகளோடு மக்களை இழுக்க வகைதேடி வருகிறார்கள்.

4. தன் ஜீவனை ரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான். மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? என்கிறார் இயேசுவானவர். (மத். 16:25-27)

5. வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல. நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்'' என்கிறார் அப்போஸ்தலனாகிய பவுல், கலா. (1:7-8)

6. உங்கள் செய்கைகளின் பலனை இழந்துபோகாமல், பூரண பலனைப் பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள். கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிற வனோ பிதாவையும் குமாரனையும் உடையவன். ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள் என்கிறார் அப்போஸ்தலனாகிய யோவான் (2 யோவான் 8-10).

7. நாம் மெய்யான சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியவில்லையானால் நித்திய அழிவை அடைவோம் என்று எச்சரிக்கிறார் பரிசுத்த ஆவியானவர். (2தெச. 1 : 7 - 10) ஆகையால், கிறிஸ்துவின் சுவிசேஷ சத்தியத்தையும், அவருடைய சபையையும் தெரிந்தெடுத்து அதில் இணைந்து பூமியிலும், பரலோகத்திலும் தேவனோடும் கிறிஸ்துவோடும் வாழுவோம். தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!!

# வல்லமை தேவனுடையது

**சகோ.** பாண்டியன்

**ந**ம் வாழ்வில் நாம் விரும்பாத அநேகக் காரியங்கள் நடக்கின்றன. எதிர்பாராத ஆபத்துகளையும் சந்திக்க வேண்டியுள்ளது. பொருளாதாரம் இருந்தும் நிம்மதி இல்லாமல் அநேகர் இருக்கிறார்கள். அதனால் தான் ஞானி சாலொமோன், பூமியில் எல்லாம் **மாயை** என்று சலித்துக் கொண்டார். உபத்திரவங்களின் உச்சத்தைத் தொட்ட யோபு சொல்லும்போது, ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தவனுமாய் இருக்கிறான் என்றார். இப்படிப்பட்ட வாழ்க்கையில் நமக்கு ஆலோசனை சொல்லி வழி நடத்தவும், சோர்வில் தாங்கி பெலப்படுத்தவும் நமக்கு ஒரு வல்லமை தேவைப்படுகிறது. சங். 62-11ல் தேவன் ஒரு தரம் விளம்பினார். இரண்டு தரம் கேட்டிருக்கிறேன் **வல்லமை தேவனுடையது** என்பதே என்று வாசிக்கின்றோம்.

ஆபிரகாமுக்கு சர்வவல்லவர் என்ற பெயரில் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்ட தேவனை, அதே பிதாக்களின் காலத்தைச் சேர்ந்த யோபு சொல்லும்போது, **தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்,** நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்கிறார் (யோபு 42:2) எவைகளைச் செய்ய வல்லவர்? **முதலாவது நம்மை தப்புவிக்க வல்லவராய்** இருக்கிறார். வனாந்தரத்தில் ஆகாருக்கு தண்ணீரைக் காணச் செய்த தேவன், பஞ்ச காலத்தில் ஈசாக்குக்கு பயிரை நூறு மடங்கு விளையச் செய்தார். பாலைவனத்தில் இஸ்ரவேலருக்கு உணவு கொடுத்ததுமன்றி பகலில் மேகஸ்தம்பம் - இரவில் அக்னி ஸ்தம்பத்தினால் பாதுகாத்தார். அதே தேவன் சொல்கிறார் ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து அவனைக் கனப்படுத்துவேன் (சங். 91:15) இது சர்வ வல்லவருடைய நிழலாகிய சபை மக்களுக்கு தேவன் தரும் வாக்குறுதியாகும்.

இரண்டாவதாக, தம் வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற தேவன் வல்லவராய் இருக்கிறார் (ரோமர் 4:21). இந்த வார்த்தையை ஆபிரகாமுக்கு பவுல் பயன்படுத்தி நம்மையும் அதே தேவனிடத்தில் விசுவாசத்தில் நாம் வல்லவர்களாய் மாற உற்சாகப்படுத்துகிறார். தம் ஜனங்களை ஆசீர்வதிப்பதே **கர்த்தருக்குப் பிரியம்** என்று கண்ட பிலேயாம் அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா (எண். 23:19) என்று கேள்வி மேல் கேள்வி கேட்கிறார். இதற்கு பதில் சொல்வது போல் சாலொமோன் என் தகப்பனாகிய தாவீதுக்கு **வாக்கினால்** சொன்னதை தம்முடைய கரத்தினால் (செய்கையால்) நிறைவேற்றினார் (1 ராஜா. 8:15). மட்டுமல்ல, அவருடைய நல்வார்த்தைகளில் எல்லாம் ஒரு வார்த்தையானாலும் தவறிப் போகவில்லை என்கிறார் (1 ராஜா 8:56). ஆக, நாம் செய்ய வேண்டியதெல்லாம் அவரில் விசுவாசம் வைப்பதே!

மூன்றாவது, நம்மிடத்தில் சகலவித **கிருபையையும்** பெருகச் செய்ய வல்லவராய் இருக்கிறார் (2 கொரி. 9.8 ). அரசு வேலைகளில் இருப்பவர்களுக்கு அவர் பெரும் ஊதியத்தில் உயர்வு கொடுப்பது போல நம் தேவனும் நமக்கு கொடுக்கும் நன்மைகளைப் பெருகச் செய்கிறார். பொருளாதாரத்தில் மட்டுமல்ல, ஆவிக்குரிய வளர்ச்சியையும் அவரே பெருகச் செய்பவர். அதனால் தான் காணிக்கையை உற்சாகமாகக் கொடுக்க வேண்டும் என்கிறார் பவுல். ஆபிரகாமுடன் வந்த லோத்துக்கும் ஆடு மாடுகளை, ஆஸ்தியை பெருகப் பண்ணின தேவன் கிறிஸ்துவோடே சேர்ந்த நம்மையும் நற்கிரியைகளிலும், விசுவாசத்திலும் பெருகச் செய்ய வல்லவராய் இருக்கிறார் (எபி. 6:14).

நான்காவதாக, நமக்கு வரும் சோதனைகளில் உதவி செய்ய வல்லவராய் இருக்கிறார் (எபி. 2:18). மனுஷருக்கு நிச்சயமாக சோதனைகள் உண்டு. அதில் சிலர் தோற்றுப் போய் மது, மாது, சூது போன்ற பாவங்களில் சிக்கிக் கொள்கின்றனர். ஆனால், தேவன் அதற்கு தப்பும் படியான போக்கை தந்து உதவுகிறார் 1 கொரி. 10:13. யோசேப்புக்கு சொந்த சகோதரர் மூலம் சோதனை வந்தபோது போத்தி பார் மூலம் உதவி செய்தார். அங்கும் அவன் கற்புக்கு சோதனை வந்து சிறையில் அடைக்கப்பட்டான். ஆனால், தேவன் அவனைக் கைவிடாமல் எகிப்து ராஜ்ஜியத்தின் உயர் பதவிக்கு உயர்த்தினார். நாமும் பரிசுத்த வாழ்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கும்போது நம்மையும் தேவன் மேன்மைப்படுத்துவார் என்பதில் சந்தேகமில்லை

ஐந்தாவது, நமக்காக வழக்காட தேவன் வல்லவராய் இருக்கிறார் (நீதி. 23:11) அவர்களுடைய மீட்பர் வல்லவர். அவர்களுக்காக வழக்காடுவார். பவுல் அப்போஸ்தலன் குறிப்பிடும்போது நம்முடைய வழக்கை சபையாராகிய பரிசுத்தவான்களிடத்தில் அல்லாமல் அநீதிக்காரரிடத்தில் போகக் கூடாது என்கிறார் (1 கொரி. 6:.1). நீதிமன்றத்தில் பணமுள்ளவர்கள் நல்ல வக்கீலை வைத்து சாதித்துக் கொள்கிறார்கள். ஆனால், தேவனுடைய பிள்ளைகளுக்காக தேவனே வழக்காடுவார். ஆவிக்குரிய காரியங்களில் நாம் விழுந்து போய் விடும்போது நாம் பாவஞ் செய்யாதபடிக்கு இயேசு நமக்காக தேவனிடம் வழக்காடுகிறார் (1 யோவான் 2:1) தேவனை நம்புகிற ஜனங்களை யார் ஒடுக்கினாலும் தேவன் அவர்களை தண்டிப்பார் (ஏசா 49:26) மேலும், இதோ உனக்காக வழக்காடி, பழிவாங்குவேன் என தைரியப்படுத்துகிறார் (எரே. 51:36),

யாக்கோபு தன் குமாரர்களை ஆசீர்வதிக்கும் போது யோசேப்பைக் குறித்து, அவன் புயங்கள் யாக்கோபுடைய வல்லவரின் கரங்களால் பலத்தன, உன் தகப்பனுடைய தேவனாகிய சர்வ வல்லவராலே அப்படியாயிற்று. அவர் உயர வானத்திலிருந்து உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், கீழே ஆழத்திலிருந்து உண்டாகும் ஆசீர்வாத ங்களினாலும், கர்ப்பங்களுக்கும் உரிய ஆசீர்வாதங்களினாலும்

உன்னை ஆசீர்வதிப்பார் (ஆதி. 49:24,25) என்று வாழ்த்துகிறார். ஆனால், சிலர் பிரச்சினைகளைச் சந்திக்கும் போது யோபுவைப் போல தேவன் என் இருதயத்தை இளக்கரிக்கப் பண்ணினார். சர்வவல்லவர் என்னைக் கலங்கப் பண்ணினார் என்று (யோபு 23:16) புலம்புகிறார்கள். நகோமி போல கர்த்தர் என் வாழ்க்கையை கசப்பாக்கினார் என்று தப்பான எண்ணம் கொள்கின்றனர்.

ஆனால், தேவனுடைய வார்த்தை கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே என்றும், தேவன் நிச்சயம் நமக்கு நியாயத்தையும் நீதியையும் தருவார் என்றும் வேதம் நமக்கு எடுத்துச் சொல்கிறது (யோபு 8:3) அவர் யோசனையில் பெரியவரும் செயலிலே வல்லவருமாய் இருப்பதால் அவனவனுடைய வழிக்குத் தக்கதாக பலனளிக்கிறவர். ஆகவே, நாம் ஆத்துமாவையும் சரீரத்தையும் அழிக்க வல்லவராகிய தேவனுக்கே பயப்பட வேண்டும் என்றார் நம் ஆண்டவர் இயேசு. வல்லமை தேவனுடையது எனவே நாம் மற்றவர்களைக் குற்றப்படுத்தக் கூடாது என்கிறார் (யாக்கோபு 4:12) தேவனே இரட்சிக்கவும் அழிக்கவும் வல்லவர் மற்றவனை குற்றப்படுத்துகிற தற்கு நீ யார்? என்கிறார். நாம் சிருஷ்டியை அல்ல சகலத்தையும் சிருஷ்டித்த வல்லவரையே தொழுது கொள்வதால் நம்பிக்கையோடே தைரியமாக இருப்போம். தேவக் கிருபை நம் அனைவரோடுங் கூட இருப்பதாக. ஆமென்!

†

## கர்த்தர் மேல்

*1) பாரத்தை வைக்க வேண்டும் - சங் 55-22*

*2) கவலைகளை வைக்க வேண்டும் - 1 பேது 5-7*

*3) நம்பிக்கை வைக்க வேண்டும் - சங் 146-5*

*4) விசுவாசம் வைக்க வேண்டும் - 2 இரா 17-14*

# இரண்டு மாறுபட்ட பெண்மணிகள்

*சகோ. KM பிலிப். பவானி*

அன்பான திருமறை ஆசான் வாசகர்களுக்கு நல் மீட்பர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். பழைய ஏற்பாட்டிலே சிறிய வரலாற்றுப் புத்தகமாகிய ரூத்தில் காணப்படும் இரண்டு மாறுபட்ட பெண்மணிகள் மூலம் அநேக அனுபவ பாடங்களை நாம் கற்றுக் கொள்ள முடியும். வரலாறு சுருக்கமாக இருந்தாலும் பெருக்கமான ஆசீர்வாதங்களை அனுபவிக்க முடியும். இதில் முதலாவது நகோமி என்ற பெண் குறித்து கவனிப்போம்.

நகோமி யூத வம்சத்தை சார்ந்தவள். தேவனுடைய நகரமாகிய எருசலேமுக்கு அருகில் உள்ள பெத்லெகேமில் குடியிருந்தாள். தேவ சமூகத்திலும், தேவனுடைய பிள்ளைகளோடும் நெருங்கிப் பழக வாய்ப்புடையவள். இதன் மூலம் பக்திக்குரிய காரியங்களையும் கற்றறிய வாய்ப்புள்ளவள். ஆனால், கிடைத்த எல்லா வாய்ப்புகளையும் இழந்தவளாய் பக்தி அற்றவளாய் வாழ்ந்து தன் குடும்பத்தையே இழந்து நின்றாள் என்பதே நாம் கற்றுக்கொள்ளும் பாடம். இவளுக்கு எலிமெலேக்கு என்கிற கணவனும் இரண்டு ஆண் பிள்ளைகளும் உண்டு. இவர்கள் வசித்த யூதா தேசத்தில் பஞ்சம் வந்தது. அதனால் இவர்கள் பெத்லெகேமை விட்டு வெளியே போய் மோவாப் தேசத்தில் குடியேறினர். இந்த நடைமுறை தேவ ஜனத்திற்கு ஏற்றதல்ல. இதில் நகோமி செய்த முதல் தவறு; யூதா தேசத்திலுள்ள எல்லோருக்கும் பஞ்சம் உண்டாயிற்று. தேவனின் உன்னத பராமரிப்பை உணர்ந்த மற்றவர்கள் அங்கேயே இருந்தனர். தேவன் தன் ஜனத்தை பத்து வாதைகளிலிருந்து தப்புவித்தார்; செங்கடலை இரண்டாகப் பிளந்து கடக்கச் செய்தார்; பகலில் நிழலுக்காக மேகஸ்தம்பமும், இரவில் வெளிச்சத்திற்காக அக்னி ஸ்தம்பமும் அவர்களின் தாகம் தீர்க்க கற்பாறையிலிருந்து தண்ணீரும், மூச்சுக் கூட படாத நிலையில் தானாகவே விழுந்து நொறுங்கிய எரிகோ மதிலும், பாலும் தேனும் ஓடும் கானான் தேசம் இவர்களுக்கு சுதந்திரமாய் கிடைத்த மாபெரும் தேவ வழி நடத்துதல்களையும் மறந்து நகோமியின் குடும்பம் வெளியேறியது மாபெரும் பாவமாகும். உம்முடைய தேவ பக்தி, உம்முடைய உறுதியையும், உம்முடைய வழிகளின் உத்தமம் உம்முடைய நம்பிக்கையுமாயிருக்க வேண்டியதல்லவோ ? (யோபு 4:6) என்ற கேள்விக்குரியவளாய் நகோமி செயல்பட்டாள். பஞ்சத்தில் உயிரோடே காக்கவும், கர்த்தருடைய கண் அவர்கள் மேல் நோக்கமாயிருக்கிறது (சங். 33:19) என்பதையும் கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவை திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார் நீ நீர்ப் பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும், வற்றாத நீரூற்றைப் போலவும் இருப்பாய் (ஏசா.58:11) என்பதையும் மறந்தவளாய் தேவ சமூகத்தை விட்டு விலகிச் சென்றாள்.

2–வது தவறு மோவாபியரிடம் குடியேறினாள். எவ்வளவு துணிகரம் என்று பாருங்கள். காரணம் அம்மோனியரும் மோவா பியரும் கர்த்தருடைய சபைக்குள் உட்படலாகாது (உபா. 23:3) என்று தேவன் மோவாபியரை ஒதுக்கி வைத்திருக்கிறார். தேவன் ஒதுக்கியவர்களோடு தேவ ஜனம் ஒட்டி உறவாடலாமா ? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது ? (2 கொரி. 6:15). இந்த துணிகரமான பாவத்தால் நகோமி கணவரை இழந்து விதவையானாள். இதில் நகோமி செய்த தவறுகள் என்ன? ஒரு புத்தியுள்ள ஸ்திரீயாயிருந்து பெத்லெகேமை விட்டு வெளியேறும் திட்டத்தை போராடி தடுத்திருக்க வேண்டும். தன் வாயை ஞானம் விளங்கத் திறந்திருக்க வேண்டும். தயையுள்ள போதகம் அவள் நாவின் மேல் இருந்திருக்க வேண்டும். தன் வீட்டுக் காரியம் எப்படி நடக்கிறது என்று கண்ணோக்கமாயிருந்திருக்க வேண்டும். அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும்படியான வாழ்க்கை வாழ்ந்திருக்க வேண்டும். இலைகள் நிச்சயம் கணவன் எல்கானாவின் திட்டத்தை தடுத்திருக்கும். ஏனெனில், புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள் (நீதி. 31:26,27,11;14:1) கணவன் இறந்த பிறகாவது தன் தவறை உணர்ந்து தேவனுக்குப் பயந்து தன் பிள்ளைகளோடு யூத தேசத்திற்கு திரும்பி இருக்க வேண்டும். கர்த்தருக்கு பயப்பட நினைக்கும் அவளை தீமை அணுகாமலிருந்திருக்கும். ஆனால், பக்தி அற்ற, புத்தியற்ற நகோமியோ தன் இரண்டு மகன்களுக்கும் தேவனுக்கு விரோதமாய் துணிகரமாய் மோவாப் இனத்திலேயே பெண் கொண்டாள். அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக. ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கிய மேது (2 கொரி.6:14). இப்பொழுது நகோமியின் இரு பிள்ளைகளும் மரித்துப் போனார்கள் – ஒளி மங்கிப் போயிற்று. இருள் சூழ்ந்து கொண்டது. ஒரே வீட்டில் மூன்று விதவைகள் துணிகரமான புத்தியற்ற, பக்தியற்ற, கூடாநட்பால் நகோமி வாழ்க்கையை இழந்து நிற்கிறாள். ஆம் தேவ பிள்ளைகள் உணர்த்தப்பட்டும், தொடர்ந்து தேவனுக்கு விரோதமான பாவங்களை செய்யும் பொழுது, ''பாவத்தின் சம்பளமாகிய மரணத்தின் அகோரத்தை அனுபவிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். அன்பானவர்களே! தேவனிடமிருந்து பெற்றுக் கொண்ட எதையும் இழந்து விடாதீர்கள். இந்த சூழ்நிலைகளிலும் நகோமி தன் தவறை உனராமல் தேவனையே குற்றப் படுத்தினாள். கர்த்தர் தம் ஜனங்களை சந்தித்து (யூதா தேசத்தில்) அவர்களுக்கு ஆகாரம் அருளினார் என்று கேள்விப்பட்ட நகோமி தன் மருமக்களிடம் பேசும்போது கர்த்தருடைய கரம் எனக்கு விரோதமாயிருக்கிறது என்றும், பெத்லெகேமுக்கு சென்றபோது தன்னை விசாரித்த ஊராரிடத்தில், ''சர்வ வல்லவர் எனக்கு கசப்பைக் கட்டளையிட்டார் கர்த்தர் என்னை வெறுமையாய் திரும்பி வரப் பண்ணினார் (1:13,20,21) என்றும் தேவன் பேரிலேயே குற்றம் சுமத்தினாள். தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான் அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ

இரக்கம் பெறுவான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் [நீதி. 28:13]

இப்பொழுது இரண்டாவது பெண்மணி ரூத்தை கவனிப்போம். நகோமியின் பிள்ளைகளை திருமணம் செய்த ரூத், ஓர்பாள் இருவரும் விதவையானார்கள். இதில் ஓர்பாள் தன் இனத்தாரிடத்திற்கு திரும்பி சென்று விட்டாள். ஆனால், ரூத்தோ விதவையாயிருக்கும் தன் மாமி நகோமியைத் தன்னோடு இணைத்து கொண்டாள். உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன் [1:16] என்று உறுதியாய் பற்றி கொண்டாள். தேவனற்ற ரூத் கர்த்தர் தம்முடைய ஜனங்களை சந்தித்தார் என்பதை விசுவாசித்தாள். அவர் காயப்படுத்தி காயங்களை கட்டுகிறவர் அவர் அடிக்கிறார் அவருடைய கை ஆற்றுகிறது [யோபு 5:18] என்பதையும் புரிந்து கொண்டு நகோமியோடு பெத்லெகேமுக்கு வந்தாள். மாமி – யார்? என்று கேட்காமல் மாமி என்னுடையவள் என்று தாய் போல் நேசித்தாள். உன்னிடத்தில் அன்பு கூருவது போல் பிறரிடத்திலும் அன்பு கூருவாயாக என்பது பிரதான கற்பனைகளில் ஒன்று [மத். 22:39]. இந்த அன்பு சொந்தத்திலேயே இல்லையென்றால்; சபை விசுவாசிகளுக்குள் இல்லையென்றால் எப்படி பிறரிடத்தில் அன்பு கூர முடியும்? சிந்தித்து செயல்படுவோம். மரணமேயல்லாமல் வேறொன்றும் நம்மை பிரிக்க முடியாது என்பது ரூத்தின் அன்பு நிறைந்த பாசத்தை வெளிப்படுத்துகிறது. வெறும் பேச்சில் அல்ல; ரூத்தின் இனம், தேசம், உறவுகளையெல்லாம் விட்டு நகோமியோடே பெத்லெகேமுக்கு புறப்பட்டாள். சொல்லும் செயலும் சரியாயிருந்தது. நாமும் கூட ஞானஸ்நானம் எடுக்கும் பொழுது எத்தனையோ தீர்மானங்களை எடுத்திருக்கிறோம். அதை நிறைவேற்றுவதில் சரியாய் இருப்போம்.

ரூத் நகோமியை நோக்கி, **நான் வயல்வெளிக்குப் போய் கதிர்களை பொறுக்கிக் கொண்டு வருகிறேன்** என்றாள் [3:2]. இதில் வேலை செய்ய மனமில்லாதவள் சாப்பிடவும் கூடாது என்ற வசனத்திற்கேற்ப [2 தெச 3:10] சோம்பலாயிருப்பது நல்லதல்ல என்ற பண்பும் விளங்குகிறது. மேலும், இளம் பெண் எதையும் சாதிக்கக் கூடிய வயதுள்ள ரூத், மாமியிடம் அனுமதி கேட்பது அவளது தாழ்மையான சிந்தனையே எடுத்துக்காட்டுகிறது. ஆம், தாழ்மையுள்ளவர்களுக்கோ கர்த்தர் கிருபையளிக்கிறார் [நீதி. 3:34] பாருங்கள் அவள் வேலைக்குச் சென்ற இடம் தற்செயலாய் தன் மாமன் எலிமெலேக்கின் வம்சத்தைச் சார்ந்த போவாசுடையதாயிருந்தது. அவன் கண்களில் அவளுக்கு தயவு கிடைத்தது. போவாஸ் ரூத்தின் பண்புகளை அறிந்திருந்தபடியால், உன் செய்கைக்குத்தக்க பலனை கர்த்தர் உனக்கு கட்டளையிடுவாராக என்று சொல்லி நிறைவான பலனைக் கொடுத்தான். நாமும் கர்த்தரை நம்பி நன்மை செய்வோம்; உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து அவர் மேல் நம்பிக்கையாயிருப்போம்.

அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார் [சங். 37:3,5] சுதந்திரவாளியான போவாசை சுதந்தரிக்க ரூத் செய்த 4 நற்காரியங்களை கவனிப்போம். மணவாட்டியாகிய நாம் மணவாளனை சுதந்தரித்துக் கொள்ள தேவையான நற்காரியங்களை கற்று ஆயத்தமாயிருப்போம்.

முதலாவது, ரூத் குளித்துவிட்டு போவாசிடம் செல்ல வேண்டும். [3:3–4]. நாமும் மணவாளனை சுதந்தரிக்க சுத்திகரிப்பு அவசியம் இதைத்தான் பாவமற கழுவப்பட்டு சுதந்தரிக்கப்பட ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம் [அப். 2:41,47]. சபையில் சேர்க்கப்பட்ட நாம் கிறிஸ்துவின் வருகை மட்டும் நம்மை கறை, திரை, பிழையற்றவர்களாய் காத்துக் கொள்ள வேண்டும் [2 பேதுரு 3:14]

இரண்டாவதாக, எண்ணெய் பூசிக்கொள்ள வேண்டும். எண்ணெய் பூசுவது முகக் கலையை உண்டு பண்ணும் என்று தாவீது தன் அனுபவத்தில் கூறுகிறார் [சங். 104:15]. நாம் வெளிச்சத்தின் பிள்ளைகள் நம் முகத்தில் இருள் இருக்கக் கூடாது. கர்த்தருக்குள் எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருக்க வேண்டும். மற்றவர்கள் நம்மில் வெளிச்சத்தை தான் பார்க்க வேண்டும்.

மூன்றாவதாக, வஸ்திரங்களை உடுத்திக் கொள்ள வேண்டும்: ஆம், தகுதியான வஸ்திரங்களை உடுத்திக் கொள்ள வேண்டும் மேலும், இரட்சிப்பின் வஸ்திரத்தை உடுத்தி நீதியின் சால்வையை தரித்துக் கொள்ள வேண்டும் [ஏசா. 61:10;வெளி. 19:8].

நான்காவது, பாதத்தண்டை படுத்துக்கொள்ள வேண்டும். அதாவது தன்னை முழுவதும் தாழ்த்தி ஒப்புக்கொடுக்க வேண்டும். ஆம், ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும்.

ரூத் இவைகளையெல்லாம் சரியாய் நிறைவேற்றி ஆயத்தமாகக் காத்திருந்தாள். ஏற்ற வேளையில் போவாஸ் ரூத்தை மனைவியாக ஏற்றுக் கொண்டான். ரூத் மீட்கப்பட்டாள், கண்ணீர் யாவும் துடைக்கப்பட்டது. தேவ கிருபையால் ஒரு ஆண் குழந்தையை பெற்றெடுத்தாள், விதவை மணவாளியானாள்; விதவை தாயானாள். குடும்பம் கட்டப்பட்டது. உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்று எல்லாவற்றையும் விட்டு புதிய வாழ்க்கைக்கு ரூத் தன்னை ஒப்புக்கொடுத்தபடியால் தேவன் சகலமும் நன்மைக் கேதுவாய் நடத்தினார். எல்லாவற்றிற்கும் மேலாக தாவீதின் வம்சா வழியில் இணைக்கப்பட்டு இயேசு கிறிஸ்துவின் வம்ச வழியோடு இணைக்கப்பட்டாள். சபையில் இணைக்கப்பட்ட நாம் கிறிஸ்துவின் வருகையில் அவரோடு இணைக்கப்பட்டு பரலோகத்தை சுதந்தரிப்போமாக! ஆமென்!!

✝

# ஊழியர்களுக்கான சிறப்பு மருத்துவ முகாமின் போது...



## World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Tuesday 6:30 - 7:00 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm


Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026



**"Registered" with RNI No: TNTAM/2006/20446**
Postal regn. No. Erode/26/ 2021 - 2023
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Date Of Publication: 17/18 th of Every Month
Date Of Posting: 20/21 of Every Month
Place Of Posting: Erode HPO

**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

# எங்களது இதர வெளியீடுகள்


**தபால் செலவிற்கு**
**பணம் அனுப்பி**
**இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**




















## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ.எண் 27, காங்கேயம் 638–701.
தமிழ்நாடு , இந்தியா.

To:

## திருமறை தியானம்

**நம்பிக்கை** தொலைக்காட்சியில்

செவ்வாய் காலை 6:30 – 7:00 மணி
வெள்ளி காலை 7:30 – 8:00 மணி

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.